# தமிழரசு



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!






"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணு



வெளியீடு :—
இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு.

## ...த இதழில்....

**வணக்கம்....**

ஏப்ரல் முதல் நாளிலிருந்து 24-வது கூட்டுறவு கைத்தறிக் கண்காட்சி நடைபெறுகிறது. வேளாண்மைக்கு அடுத்தபடியாக நமது நாட்டில் பெருவாரியான மக்கள் ஈடுபட்டுள்ளது கைத்தறித் தொழிலில்தான். பாரம்பர்யமிக்க நெசவுத் தொழில் நலிந்து போய் விடாமல், நைந்து போன நெசவாளர்களின் வாழ்விலே நம்பிக்கை ஒளி வீசச் செய்வது நம் அனைவரின் கடமையாகும். அக்கருத்தினை வலியுறுத்துமுகத்தான், இவ்விதழ் கைத்தறிச் சிறப்பிதழாகவே மலர்கிறது. கைத்தறித் தொழில் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துரையும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிந்தனையைத் தூண்டிவிடும் கருத்துக்களும், மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களின் சிறப்புக் கட்டுரையும் — கைத்தறி இயக்குநர், 'கோ-ஆப்டெக்ஸ்' தனி அலுவலர் ஆகியோரின் கட்டுரைகளும் — கைத்தறித் தொழில் பற்றிய பல சுவையான தகவல்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. இலக்கியத்தில் ஆடை, தமிழர் ஆடை-இவையும் சார்புடைக் கட்டுரைகளே.

அந்நிய நாட்டுச் செலாவணியை ஈட்டித் தருவது மீன்பிடி தொழில். சென்னைத் துறைமுகத்தில் 11.3.78 அன்று நடைபெற்ற 'தஞ்சை', 'நெல்லை' ஆகிய இரண்டு மீன்பிடி கப்பல்கள் வெள்ளோட்ட விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகளை இவ்விதழில் காணலாம். கதிரவனின் உதயத்திற்கு முன் கடல் மீது சென்று ஆதவன் மறைந்த பிறகு திரும்பும் மீனவப் பாட்டாளிச் சமுதாயத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முத்தான கருத்துக்களைச் சத்தான தமிழில் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு உணவு அமைச்சரின் கட்டுரை மீன் வளர்ச்சிக் கழகம் ஆற்றும் பணிகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது.

'வளரும் தமிழகம்' என்னும் தொடரில் வானொலியில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 19-3-78-ல் ஆற்றிய உரையில் கல்விச் செல்வத்தை அனைவருக்கும் வாரி வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

'அண்ணா எனும் இலக்கியவாதி' தொடர் கட்டுரையில் 'இலக்கியம் படைக்க அண்ணா எழுதவில்லை; இலட்சியத்தை அடைய அண்ணா எழுதினார்' என்ற உண்மையை வலுவான ஆதாரங்களின் மூலம் அழகுபட விளக்கியுள்ளார் கட்டுரை ஆசிரியர்.

எல்லார்க்கும் எல்லாம் கிடைத்திடச் செய்கிறது கதர்-கிராமத் தொழில் வாரியம். நாட்டின் முதுகெலும்பான கிராமங்கள் புத்துயிர் பெற்றிடக் கிராமத் தொழில்கள் வளர்ச்சி பெற வேண்டும். அந்தச் சீரிய பணியை ஆற்றிவரும் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் பணிகள் பற்றிய விவரங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

உலக உடல்-ஊனமுற்றோர் நாள் மார்ச் 19-ம் நாளாகும். மனித சமுதாயத்தில் தாங்களும் ஓர் அங்கமே என்ற உணர்வு, உடல் ஊனமுற்றோர் நெஞ்சங்களிலே மலர்கின்ற வகையில்-சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக அவர்களை மாற்றியமைக்க அரசு மேற்கொண்டுள்ள ஆக்கப் பணிகளை விவரிக்கிறது 'உடல்-ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக' என்ற கட்டுரை.

பாரத அரசு வங்கியின் கடன் உதவித் திட்டம், ஏழை எளிய மக்களின் வாழ்வுக்கு அருந்துணையாக அமைந்துள்ளது. 'மது ஒழிந்தது! மகிழ்ச்சி நிறைந்தது!' அதைத்தான் கூறுகிறது!

**வேட்டியிற் சிறந்தது கைத்தறி வேட்டி — கால**
**வெற்றிக் கெல்லாம் அதுவே வழிகாட்டி.**

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்.



# கைத்தறிச் சிறப்பிதழ்



தமிழரசு

மலர் 8 இதழ் 19

1—4—1978

### உள்ளே...

நேர்த்திமிகு கைத்தறி 2

நெசவாளர் நிம்மதியாக வாழ 3

மீனவ சமுதாயத்தின் நன்மைக்காக .. 5

ஆழ்கடல் மீன்பிடி தொழில் வளர்ந்திட .. 7

ஒரே மாதிரியான கல்வி முறையை உருவாக்கிட 9

பஞ்சிலாடையும் பட்டிலாடையும் கொஞ்சமோ இங்கு! 11

நெய்யும் தொழிலே தொழில்

கோடிக்கணக்கான மக்களைக் கவர்ந்த கோ-ஆப்டெக்ஸ் 17

கைத்தறி வளர்ச்சி .. 21

இலக்கியத்தில் ஆடை .. 24

கோ-ஆப் டெக்ஸ் .. 25

மது ஒழிந்தது! மகிழ்ச்சி நிறைந்தது! .. 26

எல்லாருக்கும் எல்லாம் கிடைத்திட .. 33


தமிழர் ஆடை .. 41

கவின்மிகு காஞ்சிப்பட்டு.. 44

கூட்டுறவால் நெசவாளர் குடியெல்லாம் பிழைக்கும் 46

அண்ணா எனும் இலக்கியவாதி 47





# நேர்த்தி மிகு கைத்தறி

## — பேரறிஞர் அண்ணா —

நூல் எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்! நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான்! பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்காத வாய்ப்பும், வசதியும் விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும்கூட நேர்த்தியான—மெச்சத்தக்க—துணிகளைக் கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்!

ஆலைத் துணியில் தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால், இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாராகின்றன.

நெசவாளர்களது எதிர்காலத்தைக் கவனித்து—வேறு தொழிலில் அமர்த்த வேண்டும் என்பது கவனிக்கப்படத்தக்க பிரச்சினை என்றாலும்—

பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் நேர்த்தியான கைத்தறியை—வெளிச் சந்தையிலிருந்து ஏராளமான பணத்தை ஈட்டித் தந்த கைத்திறமையை—விட்டுவிட வேண்டும் என்பது வரவேற்கத்தக்க கருத்தல்ல.

மக்களின் தேவைகளை அறிந்து ஆடைத் தினுசுகளை அடிக்கடி மாற்ற வேண்டும் என்று சில பெரியவர்கள் கூறுகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் ஆண்டுக்கொரு முறை கண்காட்சியில் மட்டும் ஆடைகளைக் காண்பவர்களாக இருப்பார்கள். ஏனென்றால், கைத்தறியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை சேலைத் தினுசுகளை மாற்றி வருகிறார்கள்.

ஒரு சினிமா வெற்றிகரமாக ஓடிவிட்டால் போதும், அடுத்த வாரமே அந்தப் பெயரில் ஒரு அழகான சேலைத் தினுசு தயாரித்து விடுவார்கள் கைத்தறியாளர்கள்.

இத்தனைக்கும் அந்தச் சினிமாவை நான்கு முறை பார்க்கும் வசதி அந்த நெசவாளர்களுக்கு இல்லை ஒரே முறைதான் பார்க்கிறார். அந்தப் படத்தில் வரும் கதாநாயகி அணிந்திருக்கும் சேலையைப்போல் தயாரிக்க நினைக்கிறார். அந்த நினைப்பு நம்பிக்கையாய் மாறி, உள்ளத்திலிருந்து கிளம்பி, விரல் நுனிக்கு வருகிறது. பிறகு தறியிலமர்ந்து அழகான சேலையைத் தயாரிக்கிறார்.

கோடிக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் வதை பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாட்டின் சந்தை தேடிக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

நெசவுத் தொழில் இதுநாள் நசித்துப் போகாமல் இருக்க நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான்! ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள் தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே, கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடவர்களைப் போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும், கட்டாவையும் நம்பத் தொடங்கினார்கள் என்றால், நெசவாளர்கள் வண்ணாரப் பேட்டையில்—தண்டையார்ப்பேட்டையில்—வீதியோரங்களிலோ — குடிசைகளிலோ — குடியேற வேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்!

# நெசவாளர்கள்

## நிம்மதியாக வாழ...

முதல்வர் உரை

கைத்தறி என்று சொல்லும் பொழுது இலட்சக் கணக்கான குடும்பங்களின் வாழ்க்கையை, அவர்களின் எதிர்காலத்தை உள்ளடக்கியதாகும். கைத்தறி நெசவாளர்களுக்கு நிம்மதி ஏற்பட அவர்களுக்குள்ள சிக்கல்களைத் தீர்க்க இத்தகைய கண்காட்சிகள் நடைபெறுகின்றன.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் வாழ்வாங்கு வாழ மக்கள் அனைவரும் ஆதரவு அளித்திட வேண்டும். கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எத்தகைய தியாகங்களைச் செய்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க மறந்து விடக் கூடாது.

வெளிநாட்டினரும் நமது நாட்டில் இருப்பவர்களும் கைத்தறித் துணிகளை வாங்கி நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர். அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


கைத்தறி நெசவாளர்கள், துணிகளை நெய்யும்போது ஓர் இழை அறுந்து போனாலும் அதைச் சரி செய்ய எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது, நேரில் பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும். அப்படிக் கஷ்டப்பட்டு உருவாக்குகிற துணியை நாம் வாங்கி ஆதரவு அளிப்பது நமது கடமையாகும். நாம் துணி வாங்கக் கொடுக்கிற பணத்தினால் பயனடைகிறவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்க மறந்து விடக் கூடாது.

சுதந்தரம் வாங்கப் போராடிய நேரத்தில் மகாத்மா காந்தி அவர்கள் நமது நாட்டின் பொருளாதாரம் வெள்ளையர்களால் சுரண்டப்படுகிறது என்பதற்கு உதாரணமாக ஒரு தத்துவத்தைச் சொன்னார்.

நமது நாட்டில் உற்பத்தியாகும் பஞ்சை வெளிநாட்டிற்குக் கொண்டு சென்று அங்கே ஆலைகளில் நூற்று, துணியாக்கி, திரும்ப நமது நாட்டிற்குக் கொண்டு வந்து, நம்மிடமே விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். நமது மூலப் பொருள்களை எடுத்துச் சென்று திரும்ப நம்மிடமே விற்று லாபம் சம்பாதிப்பதை அனுமதிக்கலாமா எனக் குறிப்பிட்டார். எனவே நாமே பஞ்சை நூலாக்கி, கைத்தறி மூலம் நெய்து, ஆடை தயாரித்துக் கொள்வோம் என்ற தத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார். அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களும் கைத்தறித் தொழிலுக்கு முன்னுரிமை அளித்ததோடு அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டினார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த சமயம் புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சைப் பகுதி மக்களுக்கு உதவும் பொருட்டு 25 ஆயிரம் ரூபாயை நிதியாகச் சேர்த்தார். அந்த நேரத்தில் தமிழகத்தில் கைத்தறித் துணிகள் எல்லாம் தேங்கிக் கிடந்தன. கைத்தறி நெசவாளர்களின் வேதனையைத் — துன்பத்தைத் துடைக்க 25 ஆயிரம் ரூபாய்க்கும் கைத்தறித் துணிகளை வாங்கி, புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளித்தார்கள்.

கைத்தறித் துறைக்கு ஒதுக்கப்படும் பணம் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் வாழச் செலவழிக்கப்படுகிறது. திறமை-நாண



யம் வாய்ந்தவர்கள் நேர்மையோடு உழைக்கிறார்கள். ஒரு சிலர் செய்யும் தவற்றினால் அந்தத் துறைக்கே கெட்ட பெயரும் அதனால் பலர் கஷ்டப்பட வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் நூல் கிடைக்காமல் அவதிப்படும் நிலையும் உள்ளது. இதைப் போக்கச் சட்டம் தான் கொண்டு வர வேண்டும் என்று எண்ணாமல் அதற்குக் காரணமாக இருப்பவர்கள், மனமாற்றம் பெறவேண்டும்.


கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 6ல் ஒரு பங்கு இருக்கிறார்கள். ஏறத்தாழ 56 இலட்சம் பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கைத்தறித் துறைக்கு எந்த வகையிலும் அரசு தடையாக இருக்காது. அதனால் கைத்தறித் துணிகள் நன்றாக இருக்க வேண்டும் என்ற உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். தொண்டாகக் கருதித் துணி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் செயல்பட வேண்டும்.

நாங்கள் காலா காலமாக இந்தத் தொழிலைத்தான் செய்து கொண்டிருக்க வேண்டுமா என்ற கேள்வி நெசவாளர்களுக்கு எழலாம். அதற்காகத்தான் இந்த அரசு 10 + 2 + 3 என்ற புதிய கல்வி முறையைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தப் புதிய கல்வி முறையின் மூலம் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் 2 ஆண்டுக் காலம் தொழிற்படிப்பு பயின்றும்—அதற்குப் பிறகும் மேற்படிப்பிற்கு அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும். நெசவாளர்கள் பிள்ளைகளும் வழக்கறிஞர்களாகவும் - பொறியியல் நிபுணர்களாகவும்-மருத்துவர்களாகவும் ஆகலாம் என்ற நிலையை உருவாக்க - வசதி வாய்ப்பை ஏற்படுத்தித் தர இந்த அரசு முயன்று செயல்பட்டு வருகிறது.

கைத்தறித் துணிகளை நாம் ஏராளமாக வாங்குவதன் மூலம் கைத்தறி நெசவாளர்கள் குடும்பம் நிம்மதியாக வாழ முடியும். கைத்தறித் துணி வாங்குகிறவர்கள் ஒவ்வொருவரும் புண்ணியம் செய்தவர்கள் ஆகிறார்கள். ஏழ்மை — வறுமை — இல்லாமை ஆகியவற்றை அகற்ற உறுதுணையாக இருக்கிறார்கள்.

*[சென்னையில் 1—4—78 அன்று இருபத்தி நான்காவது கூட்டுறவு கைத்தறிக் கண்காட்சியைத் துவக்கி வைத்து முதல்வர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி.]*



ஆழ்கடலின் அளப்பரிய செல்வங்கள் உலகெங்குமுள்ள மனித இன நல்வாழ்விற்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. முப்புறமும் சூழ்ந்துள்ள கடல் செல்வத்தோடு கூட எண்ணற்ற வற்றாத ஆறுகள் உள்ளிட்ட நன்னீர் செல்வமும் அடங்கிய பேறினைப் பெற்றது இந்தியநாடு. இந்தியாவின் மொத்த கடற்கரை நீளத்தில் 17·5 சதவீதம் அளவுள்ள 1000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையை உடையது தமிழ்நாடு. மேலும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு நீர்ப்பரப்பில் 15 சதவீத அளவுள்ள 3·51 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. தற்போது, தமிழகத்தின் மொத்த ஆண்டு கடல் மீன் உற்பத்தி 2,59,000 டன்கள். இது இந்தியாவின் கடல் மீன் உற்பத்தியில் 18·63 சதவீதமாகும். அவ்வாறே தமிழகத்தின் தற்போதைய உள்நாட்டு மீன்உற்பத்தி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் 18·29 சதவீதமாகும். தமிழகத்திலிருந்து 1976-ம் ஆண்டில் ஏற்றுமதியான கடல் மீன் உணவுப்பொருட்களின் மதிப்பு ரூ. 24·16 கோடி. இது நமது நாட்டின் மொத்த கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியில் 13·43 சதவீதமாகும்.

1907-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இம்மாநில மீன்துறை இந்நாட்டிலுள்ள பிற நிறுவனங்களைவிடத் தொன்மையானது. பலவித வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதின் விளைவாக கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தி கணிசமான அளவு உயர்ந்துள்ளது. 1977-78-ம் ஆண்டின் இறுதியில் கடல் மீன் உற்பத்தி 2·75 இலட்சம் டன்னாகவும் உள்நாட்டு மீன்உற்பத்தி 1·75 இலட்சம் டன்னாகவும் உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



# மீனவ சமுதாயத்தின் நன்மைக்காக...

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இறக்குமதி செய்துள்ள ''தஞ்சை'' ''நெல்லை'' என்ற இரண்டு மீன்பிடி கப்பல்கள் வெள்ளோட்ட விழா சென்னைத் துறைமுகத்தில் 11-3-'78 அன்று நடைபெற்றது. தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இரண்டு மீன்பிடி கப்பல்களையும் இயக்கி வைத்தார்.

மீன்பிடி கப்பல்களின் முன் மாதிரிகளை உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் முதல்வரிடம் வழங்கினார்கள். அவ்வமயம் முதல்வர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''இந்த நிகழ்ச்சி, தமிழக மக்கள் நல்வாழ்விற்காக-மீனவ சமுதாயத்தின் நன்மைக்காக— உதவி செய்யும் விதத்தில் அமைந்துள்ளது. மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் விஞ்ஞான முறையில் மீன்பிடி தொழிலில் ஈடுபட வகை செய்யும் இந்த முயற்சியை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

''இயந்திர நுணுக்கம் வாய்ந்த மீன் பிடிக்கும் இரண்டு டிராலர்கள் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு டிராலர்களையும் வெள்ளோட்டம் விடும் வாய்ப்பு இங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

''வெள்ளோட்டம் விடுவது என்றால் ஒத்திகை பார்ப்பது போன்றதாகும். இந்த டிராலர்கள் பரி வாங்குவதற்கு முன்னால் இங்கே சோதித்துப் பார்த்து இங்கே வந்தாலும் மற்றவர்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வெள்ளோட்ட நிகழ்ச்சி ஏற்படுகிறது.

## முதல்வரின் உரை

''ஒரு நாடு முன்னேற-மக்கள் நல்வாழ்வு வாய்ப்புப் பெற - ஒவ்வொரு துறையிலும் நல்ல மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

''அத்தகைய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டால் அனைத்து மக்களும் பயன் அடைவார்கள். அந்த நாடு செழிப்படையும்.

''இங்கே எனக்கு மாலை அணிவித்தார்கள், கட்டு மரத் தொழிலாளர்கள் சார்பிலும், விசைப் படகு உரிமையாளர்கள் சார்பிலும் மாலை அணிவிப்பதாகக் கூறினார்கள்.

''கட்டு மரத்தோடு தன் வாழ்வை இணைத்துக் கொண்டவர்கள். உடல் பலம் அனுபவத்தை நம்பிக் கடலில் செல்பவர்கள் இங்கே எனக்கு மாலை அணிவித்தார்கள்.

''இந்த நேரத்தில் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விசைப் படகு ஓட்டுகிறவர்கள் அல்லது விசைப் படகுச் சொந்தக்காரர்கள், கட்டுமரம் ஓட்டுகிற மீனவர்கள் ஆகிய இருவருக்கிடையே நாம் விரும்பாத, நாகரிக உலகம் ஏற்காத வகையில் போராட்டம் நடைபெறுகிறது.

''அண்ணன், தம்பிகளாக உள்ளவர்கள் சண்டை சச்சரவு செய்து கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிறார்கள்; கைகால்கள் முறிகின்றன. மீனவர்களுக்கிடையே போராட்டம் உச்சகட்டம் அடைகிறது என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவருவதைப் பார்த்திருப்பீர்கள். இவர்களின் மோதலை அனுபவ ரீதியாகக் கண்ட அதிகாரிகள் இங்கே இருப்பார்கள்.

''இங்கே இதையெல்லாம் நான் குறிப்பிடக் காரணம், இரு தரப்பினரும் எனக்கு மாலை அணிவித்

ததே. இரு தரப்பினரும் பிரிந்து வந்து மாலை அணிவிப்பது தேவைதானா? இரு தரப்பினரும் ஒன்றுபட்டு, உரிமையை விட்டுக் கொடுக்காமல் நீதியின்பால் கடமையாற்றும் உடன்பிறப்புகள் என்று கேள்விப்பட்டால் எத்தனை மகிழ்ச்சியாக இருக்கும்.!

"மீனவ சமுதாயத்தினர் எப்படி விஞ்ஞான ரீதியாக மீன்பிடி தொழிலில் ஈடுபட முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அமைச்சர் எட்மண்ட் ஜப்பான் செல்கிறார். இந்த நிகழ்ச்சி அவருக்கு வழி அனுப்பு நிகழ்ச்சியாக அமைந்து விட்டது என்று எண்ணி உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.

''இங்கே டிராலர்களை ஓட்டி வைக்க வேண்டிய கடமை எனக்கு உண்டு. நான் தள்ளினாலும் அது ஓடப் போவதில்லை. இங்கே ஒரு பொத்தானை அழுத்தினால் அது ஓடும். இவை எல்லாம் ஒரு சடங்குதான்.

"உண்மையிலேயே இதை ஓட்டுபவர்கள் மற்றவர்கள்தான்.

''மக்களின் பணம் ரூபாய் 80 இலட்சம்முடக்கப்பட்டிருக்கிறது. 7 ஆண்டுக் காலத்தில் 80 இலட்சம் ரூபாய்க்கு மீன் பிடித்து அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு நிபந்தனை விதித்துள்ளது.

''டிராலர்களைக் கொண்டு மீன் பிடிப்பதுடன் தமிழக அரசின் பணி முடிந்துவிடுவதில்லை. பிடித்த மீன்களைப் பக்குவப்படுத்தி டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்.

''விற்பனை செய்யப்படுகிற கோடிக்கணக்கான ரூபாய்களை நமது உரிமை என்ற வகையில் தமிழக மக்களுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் ஆயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்றால் மனநிறைவு ஏற்படும்.

''வீடு கட்டினாலும் சரி, கப்பல் வாங்கினாலும் சரி, மீன் பிடி தொழில் செய்தாலும் சரி அதன் மூலம் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த முடியும், அதன்மூலம் எவ்வளவு இலாபம் கிடைக்கும் என்பதுதான் நமது முதல் கேள்வி.

''எதைச் செய்தாலும் அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தின் மூலம் மக்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்பதே அடிப்படையாகக் கொண்டுள்ளோம்.

"நான் வெளிநாடு சென்றிருந்தபோது விருந்து கொடுக்கப்படும் விதத்தைப் பார்த்தேன். இறால் வகை உணவுப் பண்டத்தைப் படைத்தால் அதைத்தான் மிகப் பெரிய விருந்தாக அவர்கள் கருதுகிறார்கள். பெருமையாக நினைக்கிறார்கள்.

''அப்படிப்பட்ட இறால் மீன்களைப் பிடித்து அரசுக்குச் சொந்தமான பாக்டரியில் பக்குவப் படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பினால் ஏராளமான வெளிநாட்டுச் செலாவணி பெற முடியும்.

''தனிப்பட்ட முதலாளிகள் மனமிரங்கிக் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் இந்த நோக்கம் நிறைவேறும். வசதிமிக்கவர்கள் இதைவிட்டு விலகிவிட வேண்டும் என்பதல்ல எங்கள் எண்ணம். வசதி இல்லாதவர்களை உயர்த்த வசதி மிக்கவர்கள் சற்று விலகி இருக்க வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறோம்.

''டாக்ஸி ஓட்டுகிறவர்கள் எப்படிச் சொந்தத்தில் டாக்ஸி வைத்திருக்கிறார்களோ அதைப்போல உண்மையிலேயே கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தொழிலாளர்களுக்குப் படகு சொந்தமாக இருக்கவேண்டும். இதைப்பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது.

''அப்போதுதான் ஒருவருக்கொருவர் மோதல் ஏற்படாமல் இருக்கும். கடலில் 3 மைல்களுக்கு அப்பால்தான் விசைப் படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை விசைப்படகுக்காரர்கள் மீறக் கூடாது.

''அதேபோல எல்லையை மீறி விசைப் படகு வந்து விட்டதே என்ற சந்தேகக் கண்ணோடு கட்டுமரத்தொழிலாளர்கள் பார்க்கக் கூடாது.

''புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட இந்த இரண்டு மீன் பிடி டிராலர்களைக் கொண்டு ஏராளமான மீன்களைப் பிடித்து அதைப் பக்குவப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பி அந்நியச் செலாவணியைப் பெறுவதில் இதில் ஈடுபட்டிருப்போர் முனைய வேண்டும்.


"மீன்பிடிப்பதில் விஞ்ஞான ரீதியில் புதிய யுக்திகளைக் கையாள இந்த டிராலர்கள் தருவிக்கப்பட்டுள்ளன. இந்த டிராலர்களில் பலர் பணியாற்ற வேண்டியிருக்கும்.


"மேற்கு வங்கத்திலிருந்து நம்மிடம் மீன் கேட்கிறார்கள். அங்கேயும் நாம் மீன் ஏற்றுமதி செய்யலாம். வெளிநாட்டிற்கும் ஏராளமாக மீன் ஏற்றுமதி செய்யலாம்.

''இங்கே இரண்டணா, நாலணாவிற்கு விற்கப்படும் இறால் வெளிநாடுகளில் **10** ரூபாய் **12** ரூபாய் என்று விற்கப்படுவதையும் நாம் மறந்துவிடக் கூடாது. எனவே, நாம் மீன் வளத்தைப் பெருக்கி அதிக அளவில் அந்நியச் செலாவணியைப் பெற வேண்டும்.

''இந்த முயற்சிக்கு மக்களின் ஆதரவுடன், ஆசியுடன், நல்லெண்ணத்துடன் இந்த மீன்பிடி டிராலர்களைத் தொடங்கி வைக்கிறேன்.''

***(11-3-78 அன்று, நடைபெற்ற தஞ்சை, நெல்லை மீன்பிடி கப்பல்களின் வெள்ளோட்ட விழாவில் ஆற்றிய உரையிலிருந்து..)***






# ஆழ்கடல் மீன்பிடி தொழில் வளர்ந்திட....

மீன்பிடி தொழிலில் நேரிடையாக ஈடுபட்டுள்ள மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், மீன் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலம் புரதச்சத்து நிறைந்த மீன்களை உணவாக உட்கொள்ளும் மக்கள் எல்லோருக்கும் குறைந்த விலையில் மீன்கள் கிடைப்பதற்காகவும் மீன்பிடி தொழிலில் கிடைக்கின்ற வருவாயைப் பெருக்குவதோடு அத்தொழிலை அபிவிருத்தி செய்து அதிகமான வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் செயலாற்றி வருகின்றது.


தமிழ்நாட்டில் உள்ள கடற்பகுதி மீன்வளம் நிறைந்த ஒன்று; அதேபோல் உள்நாட்டு மீன்வளமும் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான ஒன்று. கடலின் மீன் வளத்தை முழுவதும் பயன்படுத்தி மீன் உற்பத்தியை அதிகப்படுத்துவதோடு, உள்நாட்டு மீன்வளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமும் மீன் உற்பத்தியைப் பன்மடங்காகப் பெருக்க முடியும். மீன் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் சத்துவாய்ந்த ஓர் உணவைப் பெருவாரியான சமுதாயத்தின் தேவைக்குக் கிடைக்கும்படிச் செய்கின்ற சீரிய பணியையும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஆற்றி வருகிறது.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளிலுள்ள மீன் வளத்தை நாடிச் சென்று, மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களின் தொகை சுமார் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ஆகும். இந்த மீன்பிடி தொழிலில் ஏறத்தாழ 30,000 கட்டு மரங்களும் 8,000 தோணிகளும், 2,000-க்கும் மேற்பட்ட சிறிய படகுகளும் ஈடுபட்டு இருக்கின்றன. இதோடுகூட சுமார் 2000-க்கும் மேற்பட்ட விசைப் படகுகளும் இந்த மீன் பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு, கடலோரப் பகுதிகளில் மட்டும் சுமார் 2.50 இலட்சம் டன் மீன் கிடைக்கிறது. இவற்றில் கிடைக்கும் ''இறால்'' மீன்கள் எல்லாம் பெரும்பாலும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எஞ்சிய மீன்கள் எல்லாம் நம்முடைய உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. இவற்றோடு இந்தத் தொழிலில் நேரிடையாக ஈடுபட்டுள்ள மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நமது அரசு பல சீரிய பணிகளை அவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் செய்து வருகின்றது.

**மாண்புமிகு உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. ஜி. ஆர். எட்மண்ட்**



40,000-க்கும் மேலுள்ள நாட்டுப் படகுகளைப் படிப்படியாக மாற்றி, விசை இயந்திரங்களை (Out board Motors) அவைகளில் பொருத்தி, மற்றும் சிறிய படகுகளில் இந்த விசை இயந்திரங்களைப் பொருத்தி, மீனவர்களுக்குக் கொடுப்பதன் மூலமாகவும் உற்பத்தித் திறனைப் பெருக்குவதோடு, அவர்களுடைய வருவாயையும் அதிகரிக்க ஏதுவாகிறது. இதற்கான திட்டத்தையும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் உருவாக்கியுள்ளது. இதன் அடிப்படையில், ஜப்பான் நாட்டில் உற்பத்தியாகும் விசை இயந்திரங்களை (Yamaha out board Motors) இந்தியாவின் தென் பிராந்தியம் முழுவதும் விற்பனை செய்வதற்கான உரிமையையும்



தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் பெறவிருக்கின்றது. இத்தகைய மின்விசைப் படகுகளைப் பயன்படுத்தி, நேரிடையாக மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கெல்லாம் 'மானியம்' வழங்குவதற்கு அரசு வகுத்துள்ள ஒரு செயல் திட்டத்தைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நிறைவேற்ற இருக்கின்றது.


கடற்கரையில் பல்வேறு பகுதிகளில் மீன்பிடிப்பு மூலமாக மீன் உற்பத்தி பரவலாக இருந்த போதிலும் இவை பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்காத நிலை இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் நேரிடையாக மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கும் மீன்களை உட்கொள்ளும் பொதுமக்களுக்கும் இடையில் இருக்கும் 'தரகர்'களேயாகும். இந்த 'இடைத்தரகர்'களை அகற்றுவதற்காகவே, தமிழ்நாட்டில் 750 இடங்களில் சிறிய மீன் விற்பனை நிலையங்களை 1978-79—ஆம் ஆண்டில் ஏற்படுத்தி அவைகளின் மூலம் மக்களுக்குக் குறைந்த விலையில் மீன் கிடைக்க வழிவகை செய்யும் திட்டத்தைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ள இருக்கிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் சுமார் 1000 பேர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

தமிழ்நாட்டில் உவரி நீர் (Brachish Water) பகுதிகள் கடலோரத்தில் நிறைய இருப்பினும், அவற்றைப் பயன்படுத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு, மீன் உற்பத்தி செய்வதன் மூலமாக மீனவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதோடு, அந்நியச் செலாவணியை அதிகப்படுத்தும் செயல் திட்டம் ஒன்றும் நடப்பு ஆண்டில் மீன் வளர்ச்சிக் கழகத்தால் நிறைவேற்றப்பட இருக்கின்றது.

இந்தியாவிலேயே முதன் முதலாக உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் Reservoirs மீன் உற்பத்தியைச் சிறப்பான முறையில் செய்கின்ற பணியைத் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகந்தான் ஏற்றுக் கொண்டுள்ளது. மேட்டூர், சாத்தனூர், பவானிசாகர், ஆளியார், மற்றும் திருமூர்த்தி நகர் போன்ற ஐந்து பெரிய நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தி செய்கின்ற பணியைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஏற்று நடத்தி வருகிறது.


'ஆழ்கடல் மீன்பிடி தொழில்' அதிகம் வளர்ச்சி பெற வேண்டிய ஒரு பணி; இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, 'ஆழ்கடல் மீன்பிடி டிராலர்கள்' (**DEEP SEA TRAWLERS**) இரண்டை, ''மெக்ஸிகோ'' நாட்டிலிருந்து இறக்குமதி செய்து, ஆழ்கடல் மீன்பிடி தொழிலை விரிவாக்கும் பணியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டிருக்கின்றது. இந்த இரண்டு ஆழ்கடல் மீன்பிடி கலங்களோடுகூட மென்மேலும் பல பெரிய மீன் பிடிகலன்களைப் பெற்று ஆழ்கடல் மீன்பிடிப்பில் அதிகக் கவனம் செலுத்தி, உற்பத்தியை அதிகமாக்கி, அதன் மூலம் கிடைக்கும் ''இறால்'' மீன்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெருக்குவதோடு உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் சிறந்த பணியையும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தொடங்குகிறது.

'தஞ்சை', 'நெல்லை' ஆகிய இரண்டு பெரிய 'மெக்ஸிகோ' டிராலர்களின்' **MEXICAN TRAWLERS** மீன் பிடிக்கும் பணியைத் தமிழக முதல்வர் அவர்கள் 11-3-78-ல் சென்னைத் துறைமுகத்தில் துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டுக் கடல் மீன்வளத்தைப் பெருக்குவதுடன், இந்த நவீன மீன்பிடி டிராலர்களின் உதவியால், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீன் ஏற்றுமதி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட இயலும்.



வளரும் தமிழகம்

# ஒரே மாதிரியான கல்வி முறையை உருவாக்க....!



**மாண்புமிகு கல்வியமைச்சர்**
**திரு சி. அரங்கநாயகம்**

பெரியோர்களே, அருமை நண்பர்களே,

'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் பேசுமாறு, வானொலி நிலையத்தார் என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

தமிழகம் வளருகிறது; வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தத் தலைப்பு தரப்பட்டுள்ளது.

இதில் எனக்கு ஐயமுண்டு. தமிழகம் முன்னேறுகிறது என்பதில் ஓரளவுதான் உண்மையிருக்கிறது.

ஆழ்ந்து சிந்தித்தால் குறைபாடுகள் நமக்குப் புலனாகும்.

ஒரு பகுதி மக்களின் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம் ஆகிவிடாது. தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களின் தொகை இன்று 59 சதவீதமாகும். 7 ஆண்டுகளுக்கு முன் 50 சதவீதம். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர் என்றால், ஒரு நாளைக்கு ஒரு நேரங்கூட வயிறார உண்ணமுடியாத நிலையில் இருப்பவர்கள். இவர்கள் தொகை வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்று அவர்கள்தான் பெரும்பான்மையினர்.

தமிழகம் உண்மையிலேயே வளருகிறதென்றால் வறியவர்களின் தொகை வளருவது தடுக்கப்பட வேண்டும்; அந்தத் தொகை குறைய ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழகம் வளருகிறது என்று பொருள்.

நாம் போடும் திட்டங்கள் பெரும்பான்மை மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியவையாக-பொருளாதார ரீதியில் அவர்களது வளர்ச்சிக்கு வழிகோலுவதாக அமைய வேண்டும்.

அதற்குப் பல்வேறு துறைகளில் எடுக்கப்படும் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு ஏற்றபடி கல்வித் துறை பணியாற்ற வேண்டும். சமூக மாறுதல்களுக்கு—முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு உதவும் சாதனங்களில் கல்வி மிகவும் வலிமை வாய்ந்த ஒன்றாகும்.

கல்வி, கலை, கலாச்சாரத் துறைகளில் எடுக்கப்படும் முற்போக்கு நடவடிக்கைகளின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தை வலிமை வாய்ந்ததாக ஆக்க முடியும்.

இன்று நாம் எடுத்து வருகிற முக்கிய நடவடிக்கைகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

''கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

என்பது தமிழ் மறை. இதை உணர்ந்து தீவிரமாகச் செயல்பட வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது. நாம் செய்கின்ற நல்ல காரியங்களின் பயனைப் பெரும்பான்மையான மக்கள் அடைய வேண்டுமென்று உண்மையிலேயே நாம் விரும்பினால் அவர்களை எழுத்தறிவற்றவர்களாக வைத்துக் கொண்டிருப்பது நியாயமல்ல; முறையுமல்ல.

அவர்களது அறிவுக் கண்ணைத் திறந்துவிட வேண்டும்.

'முதியோர் கல்வி' என்பது எல்லா வாய்ப்புகளையும் பயன்

படுத்திச் செயல்படுத்தவேண்டிய ஒரு திட்டமாகும்.

இதற்காக, தமிழக அரசு தனிக் குழுவை நியமித்து, சிறப்பான முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது.

இதில் பல்வேறு பொது சேவா அமைப்புகள் பங்கு கொள்ளத் தக்க அளவில் திட்டங்கள் வகுக்கப்படும்.

ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், இந்தப் புனித இயக்கத்தில் பங்கு கொண்டு மிகச் சிறந்த நாட்டுப் பணியாற்ற முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

எல்லாரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்ற நிலையை— முன்னேற்றத்தை வேகப்படுத்தும்; அரசு போடும் திட்டங்கள் வெற்றி அடையும் வாய்ப்புகளையும் அதிகப்படுத்தும்.

அடுத்து, பள்ளிகளில் தரப்படுகின்ற கல்வியாகும். குமாஸ்தாக்களை உருவாக்கும் கல்வித்திட்டம் என்று சொல்லுவதும் உண்டு. ஆனால் இன்று உயர்நிலைப் பள்ளிகளில் தரப்படும் கல்வி ஒழுங்கான குமாஸ்தாக்களுக்குத் தேவையானவற்றைக்கூடச் சொல்லித் தருவதில்லை.


பள்ளியிறுதி வகுப்பில் 3 இலட்சம் பேர் தேர்வு எழுதினால் அதில் 80,000 பேர் கல்லூரிகளில் சேர்கின்றனர். மீதிப்பேர் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். வேலைக்குப் போகிறார்கள்; மணம் முடித்துக் கொண்டு வாழ்க்கையின் இறங்கி விடுகின்றனர்.

அப்படிப்பட்டவர்களுக்குத் தன்னம்பிக்கையை, தகுதியைத் தருகின்ற கல்வியாக உயர்நிலைக் கல்வி இருந்தாக வேண்டும்.

அந்த இளைஞர்கள், சமுதாயத்துக்குப் பாரமாக இல்லாமல் பயனுள்ளவர்களாக மாற்றப்பட்டாக வேண்டும். இதையே உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் பிரதான நோக்கமாக நாம் எடுத்துக் கொண்டுள்ளோம். எனவேதான் புதிய முறை உயர்நிலைப் பள்ளிகளில் இடம் பெறுகிறது.

கல்வியானது சமுதாயத் தேவைகளுக்கு ஈடுகொடுப்பதாக அமைந்தால்தான் நல்ல பயன் கிடைக்கும். தற்போதுள்ள முறையில் பள்ளிப் படிப்பிற்கும், வெளியுலக வேலைகளுக்கும் இடையே பெரிய இடைவெளியுள்ளது.

'பள்ளிப் படிப்பு புள்ளிக்குதவாது' என்ற நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. இதன் விளை-



தமிழரசு

16.4.78 இதழ்
தமிழ் வளர்ச்சி இதழாகவும் பாவேந்தர் பாரதிதாசன் சிறப்பிதழாகவும் மலருகிறது!

வாகக் கல்விமுறையால் ஒதுக்கப்பட்ட மாணவர்கள் சமுதாய ஆக்கத் திட்டத்தில் தோல்வியுறுகின்றனர். சமுதாயத்தில் அவர்களின் பயன் கேள்விக்குறியாகிறது.

தற்போதுள்ள கல்விமுறை நாட்டிற்கு வேண்டிய 'வளரும்' தேவைகளை நிறைவேற்றுவதில் குறையுடையதாக இருக்கின்றது.

நாம் கொண்டு வர இருக்கின்ற புதிய கல்விமுறை — 10+2+3 என்கிற திட்டம் மேற்சொன்ன பல குறைபாடுகளை நீக்குவதாக இருக்கும்.

2 நிலையிலுள்ள புதிய — 11, 12, வகுப்புக்களில் தொழில் பாடங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்திக்கும், கல்விக்கும் நல்ல இணைப்பு ஏற்படும்; இடைவெளி குறையும்.

புதிய திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டுவருவதன் மூலம் உயர் கல்வியைப் பரவலாக்குகிறோம். கிராமப்புற மக்கள் உயர் கல்வியை மேலும் அதிகமாகப் பெற வாய்ப்புகள் இருக்கின்றன. புதிய திட்டத்தில் பல்வேறு அனுகூலங்கள் உள்ளன.

*உதவியின்மை என்ற உணர்விற்குப் பதிலாக, உற்பத்தி மற்றும் பொருள் ஈட்டும் திறனை வளர்த்துத் தன்னம்பிக்கையை ஊட்டுவது இத்திட்டத்திலுள்ள தொழில் பகுதியாகும்.

*மற்ற நாடுகளில் காணப்படும் உழைப்பின் மேன்மை இந்தியாவில் மேலும் வளர்ச்சியடையும்.

*தொழிற் கல்வி யிருப்பதால் வேலையற்ற படித்தவர் எண்ணிக்கை பெருகாது.

*கல்வியின் தரம் கணிசமாக உயரும்.

*பல்கலைக்கழகச் சேர்க்கையின் மீது ஏற்படும் அழுத்தம் குறையும். கல்லூரிகளில் உயர் கல்வியின் தரம் உயரும்.

*கல்வித் திட்டங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றவும், தேசியக் கலைத் தேர்வுகளில் முன்னேற்றம் காணவும் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாகவுள்ள புதிய கல்விக்கு வழி வகுக்கும்.

சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடுகளையும் வேறுபாடுகளையும் நீக்கி, முயற்சிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுவோமேயானால், புதிய கல்வித் திட்டம் நாட்டில் ஒரு புதிய மறுமலர்ச்சியை உண்டாக்கியே தீரும். கிராமங்களில் புத்துணர்வு ஏற்படும்.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் வெற்றி பெறும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

புதிய பாடல்கள், புதிய இசை, புதிய நாடகம் தோன்ற ஆக்கம் அளிக்கப்படும்.

புதிய கருத்துக்களை நாட்டு மக்களிடத்திலே பரப்புகிற சிறந்த கருவியாகக் கலைகள் இருக்கும்.

கல்வி, கலைத்துறைகளில் ஏற்படும் நல்ல மாறுதல்கள் 'தமிழகம் வளருவதற்கான' வாய்ப்புகளை உருவாக்கும் என நம்புகிறேன்.

மேலும் இயல், இசை, நாடக மன்றம் மூலம் கிராமியக் கலைகளுக்கு ஊக்கம் தரும் திட்டங்கள் வகுக்கப்படும்.


கலை என்பது பெரும்பான்மையான மக்கள் அனுபவிக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதோடு, மக்களது உணர்வுகளை மேம்பாடு அடையச் செய்யவும், உற்சாகப்படுத்தவுமான நிலை ஏற்பட வேண்டும்.

வணக்கம்.

(19-3-'78-ல் வானொலியில் ஒலி பரப்பப் பட்டது).

# பஞ்சிலாடையும் பட்டாடையும்



கொஞ்சமோ இங்கு!

தமிழ்நாட்டில் தோன்று தொட்டு, சிறப்புடன் விளங்கி வரும் தொழில் கைத்தறித் தொழிலாகும். நயமான கைத் தறித் துணி உற்பத்தியில் இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இத்தொழில் தனி மேம்பாடு டையதாகத் திகழ்கிறது.


நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம் படுத்த புரட்சித் தலைவரின் தலைமையிலான இந்த அரசு சில சிறப்பான திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது.

அடுத்த சில ஆண்டுகளில் தனி யார் துறை நெசவாளர்களை 60 சதவீதம் வரை கூட்டுறவுத் துறையின் கீழ்க் கொண்டுவரும் திட்டத்தின் கீழ் 1-7-1977-க்குப் பின் 14 புது கைத்தறி நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தனியார் துறையில் இருந்து 3180 நெச வாளர்கள் இப்புதிய சங்கங்களி லும் முன்னமே செயல்படும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களிலும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். 30-9-1977 அன்று தமிழ்நாட்டில் 880 கைத் தறி நெசவாளர் சங்கங்கள் 1.85 இலட்சம் உறுப்பினர்களு டன் செயல்பட்டு வருகின்றன.

பிரதம நெசவாளர் சங்கங்களி லும் மாநில கைத்தறி நெசவா ளர் கூட்டுறவுச் சங்கத்திலும் ஏற் பட்ட துணிச் தேக்கத்திற்கு நிவா ரணம் அளிக்கும் வகையிலும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவையொட்டியும் தமிழக அரசு 3-9-1977 முதல் 17-9-1977 வரை கைத்தறித் துணி விற்பனைக்கு 10 சதவீதம் தள்ளுபடி மானியம் வழங்கியது. இந்த 15 தினங்களில் கூட்டுறவுத் துறையில் ரூ. 3.64 கோடி பெறு மானமுள்ள கைத்தறித் துணி விற்பனை செய்யப்பட்டது. இதனால் பிரதம சங்கங்கள் நெச வாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்க முடிந்தது. உள்நாட்டு விற்பனை வாய்ப்புகளை பெருக்குவதோடுகூட கோ- ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி நிதி மற்றும் வர்த்தகக் கார்ப் பொரேஷன் மூலம் கைத்தறித் துணி ஏற்றுமதியை மேற்கொள்ள வும் பெருக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெளிநாடு களிலும் கைத்தறித் துணி இறக்குமதியாளர்களுடன் நேரடி தொடர்பு கொண்டு துணி ஏற்று மதிக்கான ஒப்பந்தம் செய்வதற் கென இந்த இரண்டு நிறுவனங் களும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, சிங்கப்பூர், ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளுக்கு இரு தூதுக் குழுக்களை ஜூலை/ ஆகஸ்டு மாதங்களில் அனுப்பி யது. இதன் பயனாக மேற்படி நாடுகளுக்கு ரூ. 1 கோடி பெறு மானமுள்ள டவல்கள், லுங்கிகள், சட்டைத்துணி ரகங்கள் போன்ற கைத்தறித் துணி ஏற்றுமதி செய்ய ஆர்டர் பெறப்பட்டுள் ளது. ஏற்றுமதியை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு, அடுத்த ஓரிரண்டு ஆண்டுகளில் இரு நிறுவனங்கள் மூலம் கைத்தறித் துணி ஏற்றுமதி ரூ. 5 கோடி அளவுக்கு உயர்த்தத் திட்ட மிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைத்துறை அமைச்சர்


திரு. கா. இராசாமுகம்மது



செயற்கைப் பட்டு உபயோகிப் போர் தமிழ்நாடு வட்டாரக் குழு வுக்குக் கொடுத்திருந்த சுமார் 800 மனுக்கள் சம்பந்தமாக ஆய்வு செய்து 1977-ஆம் ஆண்டு மே மாதத்திற்கான ஒதுக்கீடு 1,26,800 கிலோ செயற்கைப் பட்டு, கைத்தறித் துறை மூலம் விநியோகம் செய்யப்பட்டது.

தனியார் துறையில் செயல் படும் நெசவாளர்களுக்கென மத்



திய அரசு நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள மதுரை தீவிர கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு கிளை கடையநல்லூரில் 23-10-77 அன்று திறக்கப்பட்டு, அதில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு நூல் வழங்கப்பட்டது.


செங்கை மாவட்டம் பொதட்டூர்பேட்டைப் பகுதியில் உள்ள நெசவாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் காஞ்சிபுரம் தீவிர கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு கிளை, சுமார் 150 நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு 30-10-1977 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கிளை மூலம் சுமார் 300 கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் உயர்ந்த கூலியும் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள் தங்கள் குடிசைகளில் சுகாதாரமற்ற சூழ்நிலையில் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளதால் பெரும்பாலோர் காசநோய் போன்ற வியாதிகளால் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் அன்றாடம் வேலை செய்து ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்த வேண்டியுள்ளதால் நோயுற்றவர்களும் தக்க சிகிச்சை பெற்றுக் கொள்வதில்லை. எனவே, நெசவாளர்கள் குழுமியுள்ள பகுதிகளுக்குச் சென்று அவர்களை எக்ஸ்-ரே மூலம் சோதனை செய்து காச நோய் போன்ற வியாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதைக் கண்டறிந்து அதற்குகந்த சிகிச்சை கொடுக்க சேலம் மாவட்டத்தில் ஒன்றும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒன்றும், மதுரை மாவட்டத்தில் ஒன்றும் ஆக மூன்று நடமாடும் மருத்துவ சோதனை நிலையங்கள் ரூ. 25 இலட்சம் செலவில் அமைக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் சேராத தனியார் துறை நெசவாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அதிகக் கூலியும் கொடுக்கக் கூடிய வகையில் முந்தைய ஆண்டில் நிறுவப்பட்ட கரூர் ஏற்றுமதி உற்பத்தி நிலையம், காஞ்சிபுரம், ஈரோடு ஆகிய இடங்களில் தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையங்கள் ஆகியவை தவிர 1977-ஆம் ஆண்டில் குறிஞ்சிப்பாடியில் 1,000 நெசவாளர்களுக்கு ஓர் ஏற்றுமதி உற்பத்தி நிலையமும், சேலம், மதுரை ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் 5,000 நெசவாளர்களுக்காக 2 தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையங்களும் துவக்கப்பட்டன. மதுரை தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையம் ஒரு கூட்டுறவு நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நீளமாக நெய்யப்படும் ஆடையைக் கூறு கூறுக ஆக்குவதால் அதற்குக் கூறை என்று பெயர் வந்தது. கூறுபடுத்தி வேறுபடுத்தும் நெசவுத் தொழில் நடைபெற்றுவரும் ஊரானதால் மாயூரத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊருக்குக் 'கூறைநாடு' என்னும் பெயர் எற்பட்டது. கூறைநாடு, 'கொறநாடு' என்று மருவி அங்கே உருவாகும் புடவைக்குக் 'கொறநாட்டுப் புடவை' என்று பெயர் வழங்கலாயிற்று.





துவக்க நிலையில் இந்த நிலையங்களில் சுமார் 700 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு, இந்த மூன்று நிலையங்களின் மாத உற்பத்தி சுமார் ரூ. 4 இலட்சமாக இருந்தது. படிப்படியாக இந்த நிலையங்களில் அதிக நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முந்தைய ஆண்டுகளில் துவக்கப்பட்ட 3 தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையங்களில் சுமார் 3,500 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுப் பலன் பெற்று வருகின்றனர்.

கைத்தறி நெசவாளர்கள் நவீன முறைகளைக் கையாண்டு புதிய டிசைன்களில் துணிகளை உற்பத்தி செய்வதற்கு வழி கோலும் வகையில் கோ-ஆப் டெக்ஸ் மதுரையில் மாநில அரசு நிதி உதவியுடன் ரூ. 3.5 இலட்சம் செலவில் ஒரு ''வடிவமைப்புப் பணி மையத்தை'' (டிசைன் சென்ட்டர்) அமைத்துள்ளது.

ஈரோட்டிலுள்ள, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப் படுத்தும் ஆலை, துணி சலவை செய்தல், பளபளப்பாக்குதல், மெருகேற்றுதல் முதலியவற்றிற்கு நவீன இயந்திரங்களைப் பெற்றுள்ளது. நூல் சிட்டம், சாயப் பொறி ஒன்றுடன் இந்த சாயத் தொழிற்சாலை சமீபத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது, இந்த ஆலை திரைச் சீலைகளில் அச்சடிப்பதற்கென ( Screen Printing ) தனிப் பிரிவு ஒன்றினையும் துவக்கியுள்ளது. அதிகரித்துவரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நவீன முறையில் வண்ண வண்ண நிறங்களில் சாயமேற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தும் ஆலை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள முக்கிய இடங்களில் ரூ. 60 இலட்சம் செலவில், 5 நவீன சாயத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஏற்றுமதி, பெருமளவில் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், கைத்தறிக்கென மேலும் பல ரகங்களை ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்தி வருவதை நெசவாளர் சமுதாயம் அறிந்திருக்கும் என்று நம்புகிறேன். நலிவுற்ற நிலையில் வாழ்ந்துவரும் நெசவாளர்களின் வாழ்க்கை மேம்பாடடைய தீவிரத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. நசிந்து வரும் கைத்தறித் தொழிலைக் காப்பாற்ற உறுதியுடன் செயல்பட்டு வரும் புரட்சித் தலைவரின் ஆட்சியில்-நெசவாளர்கள் நலம் பெற்று தொழில் பாதுகாப்புடன் செயல்பட நல்ல சூழ்நிலை உருவாகி வருவதை நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேண்ட் (PANT) என்னும் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் இல்லையென்றுதான் நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி வட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் மலையில் வாழும் மக்கள் 'பேண்ட்' என்று கூறாமல் 'குதிநி' என்று கூறுகின்றனர். குதிகால்வரை நீண்டிருப்பதால்தான் அதனைக் 'குதிநி' என்கின்றனர். 'குதிநீள்' என்னும் சொல்லே 'குதிநி' என்று மருவி வழங்கப்பெறுகின்றது.



# நெய்யும் தொழிலே தொழில்!

பி. சங்கர், ஐ.ஏ.எஸ்.,
கைத்தறி இயக்குநர்


தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் பழம் பெரும் கைத்தொழிலாகும். வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய அளவில் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது இத்தொழிலே. இந்திய நாட்டில் உள்ள 35.63 இலட்சம் கைத்தறிகளில் தமிழ்நாட்டில் மட்டும் 5.6 இலட்சம் தறிகள் உள்ளன. மொத்த எண்ணிக்கையில் 1/6 பங்கு தறிகள் தமிழ்நாட்டில் இயங்கி வந்த போதிலும் நாட்டின் மொத்த கைத்தறித் துணி உற்பத்தி அளவு 200 கோடி மீட்டரில் தமிழ்நாட்டில் உள்ள தறிகள் 60கோடி மீட்டர் துணி உற்பத்தி செய்கின்றன. அதாவது முப்பது சதவிகிதம் கைத்தறித் துணியைத் தமிழ்நாடு உற்பத்தி செய்கிறது. இத்தொழிலைத் தொன்றுதொட்டு நெசவாளர்கள் தங்கள் குடிசைகளிலேயே செய்து வருகின்றனர்.

இத்தொழில் குறைந்த மூலதனத்தில் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய இரும்பு, எஃகு, சிமெண்ட், மின்சாரம் போன்ற பொருள்கள் எதுவும் தேவையில்லாமல் பரம்பரையாகப் பெற்ற தொழில் திறமையுடன் செய்யக்கூடியதாகும். இக்காரணங்களாலேயே இத்தொழிலைப் பேணிக் காத்து வளர்ப்பதில், மத்திய, மாநில அரசுகள் தனிக் கவனம் செலுத்தி வருகின்றன.

முன்பெல்லாம் இந்தக் கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கு இதன் பழம் பெருமைகளை எடுத்துக் காட்டி மக்களின் ஆதரவை மட்டுமே நம்பியிருந்த நிலை மாறி இப்பொழுது கைத்தறித் துணியின் தரம், வகைகள், ரகங்கள் போன்றவற்றை உயர்த்தி ஆலைத் துணிகளுடன் விலை, கவர்ச்சி ஆகியவற்றில் ஒப்பிடக்கூடிய வகையில் உயர்த்துவதில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பருத்தி தவிர ரேயான், நைலான், பாலிஸ்டர் போன்ற நூலால் நெய்த கைத்தறித் துணிகளும், எல்லா வயதினருக்கும் தேவையான வேட்டி, புடவை, ஷர்ட்டிங், கோட்டிங், துண்டு ரகங்கள், படுக்கை விரிப்புகள், அலங்கார விரிப்புகள், பள்ளிச் சீருடைகள், கைக்குட்டைகள் ஆகியவை நூதன டிசைன்களிலும் மக்கள் விருப்பத்திற்கேற்றவாறும் தயாரிக்கப்பட்டு விற்பனையாகி வருகின்றன. மாறிவரும் மக்கள் தேவைக்கேற்ப புது டிசைன்களை உருவாக்க சென்னையில் செயல்படும் மத்திய அரசின் நெசவாளர் சேவா மையம் தவிர, கோ-ஆப்டெக்ஸ், மதுரையில் ஒரு புதுவகை வடிவமைப்பு நிலையத்தை நடத்தி வருகிறது.

முன்பே கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படும் சாயச்சாலைகள் தவிர தரமான கெட்டிச் சாயத்தின் மூலம் துணியின் கவர்ச்சியை அதிகரிக்க தமிழ்நாட்டில் சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி ஆகிய இடங்களில் ரூ. 60 இலட்சம் செலவில் ஐந்து நவீன சாயச் சாலைகள் நிறுவும் ஏற்பாடுகளும் செயலில் உள்ளன. தவிர கைத்தறி ஆடைகளைக் கவர்ச்சிகரமாக்க ஈரோட்டில் உள்ள கூட்டுறவுப் பதனிடும் ஆலையை ரூ. 22 இலட்சம் செலவில் விரிவாக்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் அதிகரித்து வரும் நூல் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தமிழ்நாட்டில் இயங்கும் 12 கூட்டுறவு நூற்பாலைகளும் மாநில அரசு, தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் விரிவாக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலைகள் மூலம் தரமான நூல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

கைத்தறித் துணியின் தரத்தை உயர்த்த மக்கள் விரும்பி வாங்கக் கூடிய வகைப்படுத்த எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளில் மேலே சொன்னவை சில. இத்தொழிலை இலாபகரமான முறையில் நடத்தி நெசவாளர்களின் வருவாயைப் பெருக்க, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் சிதறிக் கிடக்கும் நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ்க்கொண்டு வந்து நியாய விலையில் தங்குதடையின்றி நூல் விநியோகம், உற்பத்தி செய்த துணியைத் தேக்கமின்றி விற்பனை செய்தல் போன்ற அடிப்படை வசதிகளைச்




செய்து கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இதற்கென ஒரு திட்டம் தீட்டி செயல் படுத்தப்பட்டு வருகிறது.

நெசவாளர்களில் 60 சதவிகிதத்தினரை படிப்படியாகக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வர புதிய சங்கங்கள் அமைப்பது, நலிந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவது, தறியில்லாத நெசவாளர்களுக்குத் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது ஆகிய அம்சங்கள் இத்திட்டத்தில் அடங்கும். ரூ. 405 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் முதலாண்டு 1976-77-ல் 120 புதிய கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு தனியார் துறையில் செயல்பட்டு வந்த 37,416 நெசவாளர் கூட்டுறவுத் துறையில் சேர்க்கப்பட்டனர். நடப்பு ஆண்டில் சுமார் 30,000 நெசவாளர்கள் புதிய மற்றும் பழைய சங்கங்களில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். தறியில்லாத நெசவாளர்களுக்குச் சென்ற ஆண்டு மூன்று தொழிலியல் நெசவாளர் சங்கங்களும் இவ்வாண்டு 10 தொழிலியல் நெசவாளர் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களில் ஆண்டு உற்பத்தி ரூ. 36 கோடியிலிருந்து ரூ. 40 கோடிக்கு மேல் உயர்ந்துள்ளது.

தனியார் துறையில் செயல்படும் 22,000 நெசவாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், அதிக கூலியும் அளிக்கக் கூடிய வகையில் கைத்தறி தீவிர வளர்ச்சி நிலையங்கள், கைத்தறி ஏற்றுமதி ரக உற்பத்தி நிலையங்கள் கீழே கண்ட விவரப்படி அமைக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும் | சேர்க்கப்பட வேண்டிய தறிகளின் எண்ணிக்கை. | திட்டத்தின் மொத்தச் செலவு | சேர்க்கப்பட்ட தறிகளின் எண்ணிக்கை. | மாத உற்பத்தி அளவு. |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம் கரூர். | 1,000 | 40 | 400 | 5.00 |
| 2. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், காஞ்சீபுரம் | 5,000 | 77 | 1,700 | 6.00 |
| 3. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், ஈரோடு | 5,000 | 106 | 1,100 | 11.00 |
| 4. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம் குறிஞ்சிப்பாடி | 1,000 | 32 | 100 | 0.75 |
| 5. கைத்தறி தீவிர வளர்ச்சிக் கூட்டுறவுத் திட்டம், மதுரை | 5,000 | 120 | 250 | 1.50 |
| 6. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், சேலம் | 5,000 | 86 | 180 | 1.50 |





தற்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணிகளில் பாதி அளவுக்கு அதாவது சுமார் ரூ. 20 கோடி அளவுக்கு கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து அது தமிழ்நாட்டிலும் இதர மாநிலங்களிலும் நடத்தி வரும் சுமார் 340 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது. தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் காரணமாக ஏற்படும் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தக்கவாறு விற்பனை வசதிகளை அதிகரிக்க கோ-ஆப்டெக்ஸ் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அவற்றில் 100 புதிய விற்பனை நிலையங்களை நாடெங்கிலும் திறப்பது, தற்பொழுது முக்கிய நகரங்களிலுள்ள விற்பனை நிலையங்களை அழகுபடுத்துவது, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் 3 ஆடைகள் தயாரிக்கும் தையல் நிலையங்களை அமைத்தல், ஆஸ்திரேலியா, ஃபிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு, ரூ. 1 கோடி அளவுக்கு கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வது, ஆண்டுக்கு 17 மில்லியன் மீட்டர் ஜனதா வேட்டிகள், புடவைகள், லுங்கிகள் உற்பத்தி செய்து மலிவு விலையில் விநியோகித்தல் ஆகிய திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

இவ்வாறு பல்வேறு திட்டங்கள் மூலம் கைத்தறித் துணியின் தரத்தை உயர்த்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் எல்லா வித வசதிகளையும் செய்து கொடுத்து, நெசவாளர்கள் கைத்தறித் தொழிலை இலாபகரமாக நடத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் வாயிலாகத் தொழில் சீரடைவதோடு நெசவாளர்களின் வாழ்க்கையும் வளமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

**இந்தியாவில் கைத்தறித் துறை—**

| | |
|---|---|
| கைத்தறிகளின் எண்ணிக்கை | ... 38 இலட்சம் |
| பருத்தி | ... 35 இலட்சம் |
| பட்டு, செயற்கைப் பட்டு, கம்பளி முதலியன | 3 இலட்சம் |
| வேலைவாய்ப்புப் பெற்றுள்ளோர் | ... 1 கோடி |
| 1976ல் பருத்தித் துணி உற்பத்தி | ... 23,300 இலட்சம் மீட்டர்கள் |
| ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் உற்பத்தி இலக்கு | ... 30,000 இலட்சம் மீட்டர்கள் |

**திட்ட ஒதுக்கீடுகள் :**

| | |
|---|---|
| மத்திய அரசு | ... ரூ. 50 கோடி |
| மாநில அரசுகள் | ... ரூ. 50 கோடி |
| நிறுவனங்களின் நிதி | ரூ. 200 கோடி |
| தீவிர வளர்ச்சித் திட்டங்கள் (ஒவ்வொரு திட்டத்திலும் 10,000 தறிகள்) | துவக்கப் பட்டவை 21 |
| ஏற்றுமதித் திட்டங்கள் (ஒவ்வொரு திட்டத்திலும் 1,000 தறிகள் வீதம்) | துவக்கப் பட்டவை 21 |

**கைத்தறி ஏற்றுமதி :**

| | |
|---|---|
| 1976-77 | 240.566 கோடி ரூபாய் |
| 1977-78 | 250 கோடி (எதிர்பார்க்கப்படுகிறது) |

| | |
|---|---|
| கைத்தறிப் பொருள் நுட்பப் பயிற்சிக் கழகங்கள் | 2 (காசி, சேலம்) |
| நெசவாளர் பணி நிலையங்கள் | 18 |

'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்பார்கள்.

'ஆள்பாதி ஆடைபாதி' என்றும் சொல்வார்கள்.

இதிலிருந்தே ஆடையின் மகத்துவத்தை நாம் நன்கு உணரலாம்.

ஆதிகாலத்தில், ஆதிமனிதன் ஆடையில்லாப் பாதி மனிதனுகக் காட்சியளித்தான்.

ஆனுல் இன்று?

எத்தனே முன்னேற்றம்! எத்தனே வளர்ச்சி!

கண்ணேக் கவரும் வண்ணத் துணிகளில் வகை வகையான ஆடைகள்!

**கைத்தறியின் தரம் :**

நாகரிகம் வேகமாய் வளர்ந்து வரும் இந்நாளில், நவநாகரிகத் துணிகள், ஆடைகள் எல்லாம் புத்தம் புதிய வடிவமைப்புகளோடு வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

டெரிலின், டெரிகாட்டன் போன்ற உயர் ரகத்துணிகளோடு போட்டி போடுகிற அளவுக்கு

**ஆர். ஆறுமுகம்,**

**பி.ஏ.,(ஆனர்ஸ்) பி.எல்.,எம்.பி.ஏ.,**

**தனி அலுவலர்**

**'கோ-ஆப்டெக்ஸ்'**

இன்று கைத்தறித் துணிகளின் தரம் வேகமாய் வளர்ந்து வருகிறது.

எல்லா வகையிலும் தரமான கைத்தறித் துணிகள் குறைந்த விலேயில் எல்லார்க்கும் கிடைத்திட வேண்டும் என்ற நோக்கோடு அரும்பணியாற்றி வருகின்றது, ''கோ-ஆப்டெக்ஸ்''.

**கோ-ஆப்டெக்ஸ் :**


'கோ-ஆப்டெக்ஸ்' (Co-optex) என்று மக்களால் போற்றிப் புகழப்படும் 'கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' (Tamil Nadu Handloom Weavers Co-operative Socity Ltd.,) தலைமைச் சங்கமாகும். இது 1935-ல் தொடங்கப்பட்டது. கடந்த 43 ஆண்டுக் காலமாக இதன் நற்பணி தொடர்ந்து வருகிறது. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலப்பொருள்களேப் பெற்று விநியோகிப்பதே, இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

நாட்டிலுள்ள எல்லா நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தலைமைச் சங்கத்துடன் இணேக்கப் பெற்றுள்ளன.

அரசின் பங்கு மூலதனமான ரூ. 2.14 கோடியுடன், கோ-ஆப்டெக்சின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2.63 கோடியாகும். இயல்பான வரம்பின் கீழ் ரூ. 500 இலட்சம் ரொக்கக்கடன் பெற 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் பண்டிகைக் காலங்களில் பொதுமக்களின் அதிகபட்சத் தேவைகளுக்கேற்ப, சிறப்புக் கடன் வரம்பின் கீழ் ரூ. 250 இலட்சம் பெறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**விற்பனே பெருகிட :**

'கோ-ஆப்டெக்ஸ்' தமிழ்நாட்டில் 226 சில்லறைக் கிளே விற்பனேப் பிரிவுகளேயும், பிற மாநிலங்களில் 106 விற்பனேப் பிரிவுகளேயும் கொண்டுள்ளது. கமிஷன் ஏஜென்சி அடிப்படையில் கைத்தறித் துணிகளே விற்பதற்கு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் 200 தனியார் வணிகர்களே நியமித்துள்ளது. கூட்டுறவு நூற்பாலேகள் உற்பத்தி செய்த நூல்களேப் பெற்று இவற்றின் மூலம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பகிர்ந்தளித்திட இது 18 நூல் கிடங்குகளே நடத்தி வருகின்றது.





## கோடிக்கணக்கான

## மக்களேக் கவரும்

# கோ-ஆப்டெக்ஸ்

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இது, 1977-ஆம் ஆண்டில் 20 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்துள்ளது. 23 கோடி மதிப்புள்ள துணிகளை இது விற்பனை செய்துள்ளது. 1978-ஆம் ஆண்டில் கைத்தறித் துணிகளின் விற்பனையை 25 கோடியாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை இது மேற்கொண்டு வருகிறது.



**வண்ணத்துப் பூச்சி வழங்கும் வண்ணக்கோலங்கள்!**

வண்ணத்துப் பூச்சி வழங்கும் வகை வகையான கைத்தறித் துணிகளை இன்று மக்கள் பெரிதும் வரவேற்கின்றனா. காரணம், அதன் தரமும், எழிலும், எளிமையுமேயாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இது மற்றத் துணிகளைக் காட்டிலும் குறைந்த விலையில் கிடைப்பதேயாகும்.



கைத்தறித் துணிகள் நாடு நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும் கிடைத்திட பல்வேறு நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன. மாநிலத் தலைநகர்களிலும், தமிழகத்திலும், மற்ற மாநிலங்களிலும், முக்கிய நகரங்களிலும் ரூ. 133 இலட்சம் செலவில் 100 புதிய விற்பனைக் கூடங்கள் திறக்கப்படவிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 40 புதிய விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

**மேலைநாடு செல்லும் மேலான கைத்தறி!**

கைத்தறித் துணிகளை நம் நாட்டவர் மட்டுமல்ல, மேலை நாட்டினரும் விரும்பி வாங்குகின்றனர். தமிழகத்தில் உருவாகும் இந்தத் துணிகள் மேலைநாட்டு மக்களுக்குக் கிடைத்திட வேண்டும் என்ற நோக்கில் 'கோ-ஆப்டெக்ஸ்' ஏற்றுமதிப் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. மேலை நாடுகளுக்குக் கைத்தறித் துணியை நேரடியாக ஏற்றுமதி செய்வது இதன் பணியாகும். இவையன்றி இது, ரூ. 1 கோடி மதிப்புள்ள சட்டைத் துணிகள், துண்டுகள், கைலிகள் முதலானவற்றை ஏற்றுமதி செய்வதற்கான 'ஆர்டர்'களைப் பெற்றுள்ளது. ஏற்றுமதி விற்பனையை உயர்த்திடும் நோக்கோடு இது மேலை நாடுகளில் கிளைகளைத் திறக்கவும் திட்டமிட்டுள்ளது.

**புதிய புதிய 'டிசைன்கள்'**

காலத்துக்கு ஏற்ற வகையில் புதிய புதிய 'டிசைன்' களைக் கண்டுபிடித்து மக்களைக் கவரும் வகையில் வண்ணத்துணிகளைத் தயாரிக்கிறது 'கோ-ஆப்டெக்ஸ்' இதற்கான வடிவமைப்பு நிலையம் ஒன்றை மதுரையில் அமைத்துள்ளது. இதற்குத் தமிழக அரசு ரூ. 3.5 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

**இந்தியாவிலேயே....!**

'பாலிஸ்டர்' கைத்தறிச் சேலைகள், சட்டைகள்



( Handloom Polyster Fabrics ) ஆகியவற்றை 'கோ-ஆப்டெக்ஸ்' தயாரித்து வருகிறது. இம்மாதிரி 'பாலிஸ்டர்' கைத்தறித் துணி தயாரிக்கும் முயற்சி இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழ் நாட்டில்தான் மேற்கொள்ளப் பட்டது.

இந்தத் துணி, சென்னையிலுள்ள ஒரு காட்சிக் கூடத்தில் வைக்கப் பட்டிருந்தபோது, அது பொது மக்களையெல்லாம் வெகுவாகக் கவர்ந்தது.

இந்தத் துணி, பம்பாயில் சாஸ்மிராவிலுள்ள ஆய்வுக் கூடத்தில் ( Silk & Art Silk Mills Research Association ) பரிசோதிக்கப்பட்டு, தரமானவை என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 1000 தறிகளில் 'பாலிஸ்டர்' கைத்தறித் துணிகளைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பரோடாவிலுள்ள 'பெட்ரோ பைல்ஸ் கூட்டுறவு லிமிடெட்' என்னும் நிறுவனம் இதற்கான தொழில் நுட்ப உதவிகளையும் 'பாலிஸ்டர்' நூல் வழங்குவது சம்பந்தமான யோசனைகளையும் தர முன் வந்துள்ளது.


**கண்கவர் கண்காட்சி!**

கைத்தறித் துணிகள், ஆடைகள் முதலானவை பெருமளவில் விற்பனை செய்யவும், நெசவாளர்களின் நேர்த்தியான கைவேலைப் பாட்டினை மக்கள் உணரவும், அதன் மூலம் நெசவாளர்க்குத் தக்க வருவாய் கிடைக்கவும் 'அகில இந்திய கைத்தறி வாரக் கண்காட்சி' என்னும் கண்கவர் கண்காட்சியினை ஆண்டுதோறும் 'கோ-ஆப்டெக்ஸ்' நடத்தி வருகின்றது. முதல் கண்காட்சி 1954-ல் நடந்தது.

18-வது அகில இந்தியக் கைத்தறி வாரக் கண்காட்சியில், கைத்தறித் துணிகள் விற்பனையின் மூலம் கிடைத்த தொகை ரூ. 49,84,070. ஆனால், கடந்த ஆண்டு அதாவது 23-வது அகில இந்தியக் கைத்தறி வாரக் கண்காட்சியில் இந்தத் தொகை ரூ. 5,08,63,001 அதிகரித்துள்ளது. அடுத்து நடைபெறவிருப்பது. 24 வது அகில இந்தியக் கைத்தறி வாரக் கண்காட்சியாகும்.

இவ்வாறு, 'கோ-ஆப்டெக்ஸ்' கோடிக்கணக்கான மக்களை மகிழ்விக்கவும், அதன் மூலம் இலட்சக் கணக்கான நெசவாளர் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கவும் வழிகோலி வருகிறது.


# எழில் மிளிரும் வண்ணங்களில் எண்ணற்ற hftc கைத்தறி வகைகள்





**புதிதாக வந்துள்ள எழில் மிகு சேலைகள்!**

குடும்பம் முழுவதுக்கும் ஏற்ற நவீன எச்எப்டிஸி ஆடைகள். பட்டு & நூல் சேலைகள், அச்சிட்ட ஸில்குகள், வேட்டிகள், லுங்கிகள், துவாலைகள், அலங்காரத் துணிகள், படுக்கை விரிப்புகள், ரெடிமேட் உடுப்புகள்- இவை அனைத்தும் எச்எப்டிஸியால் சிறப்பாக தயாரிக்கப்பட்டவை.



**ஷோரூம்கள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன:**

• உம்மிடியார்ஸ் ஷாப்பிங் சென்டர், அண்ணாசாலை, சென்னை. • 1/30 பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை • 62 லஸ் சர்ச் ரோடு (காமதேனு தியேட்டர் அருகில்) மைலாப்பூர், சென்னை 600 004 • மஹாவீர் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் (ஹோலி எஞ்சல்ஸ் கான்வென்ட் எதிரில்), சென்னை 600 017 • 56/1 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை • 2 B.V.K. அய்யங்கார் சாலை, பெங்களூர் • 238 காந்தி ரோடு, திருப்பதி • 26/27 யூனிடி கட்டிடம், அபிட் ரோடு, (தாஜ்மஹால் ஹோட்டல் எதிரில்) ஹைதராபாத்-1 • 15-3-427 பிரகாசம் பந்தலு ரோடு, ஹிந்துப்பூர்-515201 • 147 ராஜா தெரு, கோயமுத்தூர். • கார்ப்பொரேஷன் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், அழகர் கோயில் ரோடு, மதுரை

# கைத்தறி வளர்ச்சி



எண்ண இன்பமூட்டும் எழில் மிகு ஆடைகள்!

கண்ணைக் கவரும் வண்ணத் துணிகள்!

சின்னஞ்சிறிய கைகள் பின்னிய சித்திர வேலைப்பாடுகள்!

கைத்தறி ஆடைகளின் வான வில் வர்ணஜாலங்கள் நம்மைக் காந்தமென ஈர்க்கின்றன!

தாழ்ந்த குடிசைகளில் உருவாகும் கைத்தறித் துணி உயர்ந்த மாடி வீடுகளில் உல்லாசமாய் உலவுகின்றதே, அது ஒன்றே போதுமே இதன் உயர்வைக் காட்ட!

நெசவாளர்களால் நேர்த்தியாகப் பின்னப்படும் இழைகள், துணியை இணைக்க மட்டுமல்ல, அவர்களையும், வாங்குகின்ற நம்மையும் இணைக்கின்ற பாலமாக அல்லவா விளங்குகின்றன?

கைத்தறித் துணிகள் எளிமையானவை; எடுப்பானவை. மற்ற விலையுயர்ந்த துணிகளைக் காட்டிலும் கைத்தறித் துணிகள் மலிவாகக் குறைந்த விலையில் கிடைக்கின்றன. உயர்ந்த வகை உடையில் மட்டும்தான் கவர்ச்சி என்று நினைத்த காலம் போய், இன்று எளிய கைத்தறி உடையில் எத்தனை கவர்ச்சி என்று சொல்லி மகிழ்கின்ற காலம் மலர்ந்துள்ளது.

இத்தனைப் பெருமைக்குரிய கைத்தறித் தொழில் தமிழ்நாட்டில் நாளும் வளர்ந்து வருவதைப் பார்க்கும்போதும், மேலை நாடுகளுக்கெல்லாம் அவை ஏற்றுமதியாவதைப் பார்க்கும்போதும் இத்தொழிலுக்கு- இவ்வகைத் துணிகளுக்கு மக்களிடையே எந்த அளவுக்கு வரவேற்பு உள்ளது என்பது நன்கு புலனாகின்றது.

தமிழ்நாட்டில் பல்வேறு தொழில்கள் பாங்காய் வளர்ந்து வருகின்றன. அவற்றுள் ஒன்றாய்த் திகழ்வது கைத்தறித் தொழில்.

இத்தொழில் எப்படியெல்லாம் வளர்ந்து வருகிறது என்பதைப் பற்றிச் சற்றுத் தெரிந்து கொள்வோமா?

### மிகப் பெரிய குடிசைத் தொழில்கள்

நமது நாட்டின் மிகப் பெரிய குடிசைத் தொழில் கைத்தறி நெசவுத் தொழிலேயாகும். பருத்தித் துணிக்கான தேவையில் மூன்றில் ஒரு பங்கு கைத்தறித் துணி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. தொழில்களில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய அளவில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது கைத்தறித் தொழிலே. துணி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருமளவு மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற கைத்தறித் துறை படிப்படியாக வளர்ச்சி பெறச் செய்வது மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழிற்கொள்கையின் குறிக்கோளில் முக்கிய அம்சமாகும்.

### 50 கோடி மீட்டர்

இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கை 35.63 இலட்சம்; அவற்றில் 5.56 இலட்சம் தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஆக, நாட்டிலுள்ள தறிகளின் மொத்த எண்ணிக்கையில் ஆறில் ஒரு பங்கு தறிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன; அதே சமயம், நாட்டின் மொத்த கைத்தறித் துணி உற்பத்தி அளவு 230 கோடி மீட்டர். இதில் தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தியளவு 60 கோடி மீட்டர் ஆகும். அதாவது நான்கில் ஒரு பங்கு தமிழ்நாடு உற்பத்தி செய்கின்றது.

### கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

1977-78 ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின்கீழ் எய்திய சாதனைகள், 1978-79-ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் ஆகியவற்றின் விவரங்கள்பற்றித் தெரிந்து கொண்டால் நல்லதல்லவா?

1976-77-ஆம் ஆண்டில் தனியார் துறையைச் சேர்ந்த 37,416 நெசவாளர்கள், புதிதாக அமைக்கப்பட்ட 120 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலும், ஏற்கெனவே உள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தவிரவும், சொந்தத்தில் தறி வைத்திராத 300 நெசவாளர்களுக்காக 3 நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

1976-77-ஆம் ஆண்டின் இறுதி வரை காஞ்சிபுரத்திலும் ஈரோட்டிலும் அமைந்த இரண்டு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்

டங்கள் மூலமாகவும், கரூரில் அமைந்துள்ள ஏற்றுமதிக்கான கைத்தறி உற்பத்தித் திட்டம் மூலமாகவும் ஏறத்தாழ 2,000 நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. 1977-78-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 30,000 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். தமக்கென்று சொந்தத் தறியில்லாத 1,600 நெசவாளர்களுக்கென்று 16 நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளன. 1976-77-ல் தொடங்கப்பட்ட மூன்று கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதிக்கான கைத்தறி உற்பத்தித் திட்டம் மூலம் மேலும் 2,500 தறிகள் சேர்க்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.


## புத்தொளி தரும் புதிய திட்டங்கள்!

நடப்பாண்டில், சேலம், மதுரை ஆகிய இடங்களில் மேலும் 2 கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களும், குறிஞ்சிப்பாடியில் ஏற்றுமதிக்கான உற்பத்தித் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மதுரை, சேலம் ஆகிய இடங்களில் ஒவ்வோரிடத்திலும் 5,000 தறிகளும், குறிஞ்சிப்பாடியில் 1,000 தறிகளும் கொண்டதாக இறுதியில் அமையும். 1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குள் இப்புதிய திட்டங்களில் 2,000 தறிகள் சேர்க்கப்படும்.

1978-79-ஆம் ஆண்டில் மேலும் 30,000 கூடுதல் கைத்தறிகளை, கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் சொந்தத் தறியில்லாத 2,000 நெசவாளர்களுக்காக 20 தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். 1978-79-ஆம் ஆண்டின் இறுதியில் 6 கைத்தறி மும்முர வளர்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதிக்கான தீவிர உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ் வரும் கைத்தறிகளின் எண்ணிக்கை 13,300 ஆக உயரும்.

## வளரும் கூட்டுறவு நூற்பாலைகள்!

தமிழ்நாட்டில் தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையின் இரண்டாவது ஆலை உட்பட 13 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மொத்த நிறுவப்பட்ட திறன் சுமார் 2 இலட்சம் கதிர்கள் ஆகும். கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் பலதரப்பட்ட ரக நூல்களை இந்த ஆலைகள் மாதந்தோறும் சுமார் 5,000 பேல் அளவிற்கு உற்பத்தி செய்



கின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலைமை அமைப்பாக இருக்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோஆப்டெக்ஸ்) நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வினியோகம் செய்யும் பொருட்டு நெசவாளர்கள் இருக்கும் முக்கியமான பகுதிகளில், 18 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. 1978-79-ஆம் ஆண்டில் குடியாத்தம், கரூர் ஆகிய இடங்களில் நூல் விற்பனை நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மேற்படி 13 கூட்டுறவு நூற்பாலைகளில் ஏழு ஆலைகள் ஒவ்வொன்றும் அவற்றின் நிறுவத் திறனை 25,000 கதிர்களாக ஏற்கெனவே விரிவுபடுத்தியுள்ளன. இதர நூற்பாலைகளும் அவற்றின் நிறுவனத் திறனை விரிவுபடுத்தி வருகின்றன. இவ்வாறு எல்லாக் கூட்டுறவு நூற்பாலைகளிலும் விரிவுபடுத்தும் திட்டங்கள் முடிவு பெற்றவுடன், அவற்றின் கதிர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்திலிருந்து 3 இலட்சமாக உயரும்.

இக்கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது, திங்கள் ஒன்றுக்குச் சுமார் 5,000 பேல்கள் உற்பத்தி செய்கின்றன. விரிவாக்கத் திட்டம் முடிவுற்றதும், இவற்றின் உற்பத்தி, திங்கள் ஒன்றுக்குச் சுமார் 8,500 பேல்களாக உயரும். கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலின் அளவு தோராயமாக திங்கள் ஒன்றுக்கு 9,000 பேல்களாக உயருமாதலால் இந்த அதிகத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இக்கூட்டுறவு நெசவாலைகளை விரிவுபடுத்துவதன் மூலமும், நவீன மயமாக்குவதன் வாயிலாகவும் எதிர்பார்க்கப்படும் கூடுதல் உற்பத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆய்வுக்கூடமும் அமைப்பும்!

கூட்டுறவு ஆலைகளில் பயன்படுத்தப்படும் பருத்தி, உற்பத்தியாகும் நூல் ஆகியவற்றின் தரத்தைச் சோதனை செய்யும் பொருட்டு ஒரு மத்திய ஆய்வுக்கூடம் ரூ. 8.25 இலட்சம் திட்டச் செலவில் சேலத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுக்கூடம் செயல்படத் தொடங்கியவுடன் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் யாவும் அவை உற்பத்தி செய்யும் நூல், பஞ்சு ஆகியவற்றின் தரத்தை சோதனை செய்ய இந்த ஆய்வுக்கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்.

கூட்டுறவு நூற்பாலைகளை நிர்விகிக்கும் பணியில், பஞ்சு வாங்குவதே மிக முக்கியமான பணியாக இருந்து வருவதால், இந்த ஆலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சினை உரிய காலத்தில் வாங்க, தகுந்த ஓர் அமைப்பை ஏற்படுத்துவது பற்றியும் தமிழக அரசு ஆய்வு செய்து வருகிறது. இதனால் இந்த ஆலைகள் வாங்கும் மூலப்பொருள்களுக்கான செலவு குறையும், தரமான பஞ்சும் கிடைக்கும்.

சேலம், மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் சில கைத்தறிகளில், சேலைகள் உற்பத்தி செய்ய பருத்தி நூலுக்கு அடுத்த படியாக செயற்கைப் பட்டு நூல் பரந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. செயற்கைப்பட்டு நூல் விநியோகம் செய்வதைக் கவனிக்க சேலத்தில் தேவையான பணியாளர்களுடன் செயற்கைப்



பட்டுநூல் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**முதன்மை பெறும் தமிழ்நாடு!**

பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு கைத்தறித் துணி உற்பத்தியில் முதலிடம் வகித்து வந்துள்ள போதிலும் செய்முறைப்படுத்தும் வசதிகள் குறிப்பாக அச்சிடும் வசதி, தமிழ்நாட்டில் போதிய அளவிற்கு மேம்பாடு அடையவில்லை. இந்தக் குறையைப் போக்க, தமிழ்நாட்டில் செய்முறைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்த வலியுறுத்தப்பட்டு வருகிறது.

நல்லமுறையில் தயாரிக்கப்பட்ட துணிக்கு வரவேற்பு இருப்பதை அறிந்து அந்தந்தத் தேவையை நிறைவு செய்யும் வகையில் கைத்தறித் தொழிலை மேம்படுத்தப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகளினால், கைத்தறித்துறை, 50 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணி முழுமை பெற்றதாக வழங்கப்பட இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரோட்டிலுள்ள, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தும் ஆலை, துணி சலவை செய்தல், பளபளப்பாக்குதல், மெருகேற்றுதல் முதலியவற்றிற்கு நவீன இயந்திரங்களைப் பெற்றுள்ளது. துணிகளுக்குச் சாயமிடும் வசதிகளுடன் இந்த ஆலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளும் உள்ளன. (1) சலவை செய்தல், வேலை நிறைவு செய்தல் (ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் மீட்டர்) (2) மெருகேற்றுதல் (ஒரு மாதத்திற்கு 2.5 இலட்சம் மீட்டர்) (3) முன் கூட்டியே சுருங்கச் செய்தல் (Eva setting) (ஒரு மாதத்திற்கு 2.5 இலட்சம் மீட்டர்)

நூல் சிட்டம், சாயப் பொறி ஒன்றுடன் இந்த சாயத் தொழிற்சாலை சமீபத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், இதன் சாயமிடும் திறன், ஒரு நாளைக்குச் சுமார் பத்துப் பேல்களுக்கு அதிகரித்துள்ளது. தற்பொழுது, இந்த ஆலை திரைச்சீலைகளில் அச்சடிப்பதற்கென (Screen printing) தனிப்பிரிவு ஒன்றினையும் துவக்கியுள்ளது.

அதிகரித்து வரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நவீன முறையில் சாயமேற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தும் ஆலை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள முக்கிய இடங்களில் ரூ. 60 லட்சம் செலவில் 5 நவீன சாயத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் செய்முறைப் படுத்தும் வசதிகளின் தேவைகளைக் கவனிப்பதற்காக ரூ. 22 இலட்சம் செலவில் மதுரையில் கூட்டுறவுத் துறையில் துணி செய்முறைப்படுத்தும் பிரிவு ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

ஈரோட்டில் ஏற்கெனவேயுள்ள செய்முறைப் பிரிவும், மதுரை மாவட்டத்தில் தகுதியான இடத்தில் அமைக்கப்படவிருக்கும் செய்முறைப் பிரிவும், ஆக இரண்டு பிரிவுகள் உள்ளதால், கைத்தறித் துணிகள் செய்முறைப் படுத்தப்படுவதற்கும், வேலை நிறைவு பெறுவதற்கும், பம்பாய்க்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. இதனால், காலம், உழைப்பு, செலவு பெருமளவில் சேமிக்கப்படுகிறது.

**கைத்தறி வளர்ச்சிக்கான திட்டங்கள்!**

மத்திய அரசு இரண்டு ஏற்றுமதி ரக உற்பத்தித் திட்டங்களையும், இரண்டு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களையும், இரண்டு தொழிற் பிரிவுகளுடன் நிறுவ அனுமதி அளித்துள்ளது. அத்திட்டங்களாவன: (1) ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர் (2) கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், காஞ்சீபுரம் தொழிற் பிரிவு. (3) கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், ஈரோடு தொழிற் பிரிவு (4) ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப்பாடி (5) கைத்தறி தீவிர வளர்ச்சிக் கூட்டுறவுத் திட்டம், மதுரை தொழிற்பிரிவு. (6) கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், சேலம் தொழிற்பிரிவு.

மேற்கூறிய திட்டங்களில் குறியீட்டளவாகக் குறிக்கப்பட்ட தறிகளைச் சேர்த்து அவற்றின் மொத்தத் தறிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*(சட்டப் பேரவையில் வைக்கப்பெற்ற கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பெற்றது.)*

## விதவைகளுக்கு உதவி செய்யத் தகவல் நிலையம்

சமூக நல இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் சென்னை நகரில் ஒரு தகவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. திக்கற்ற விதவைகளுக்கு, தங்கள் குழந்தைகளைக் கல்வி நிலையங்களில் சேர்ப்பதற்கான அறிவுரை மற்றும் உதவி புரிதலும், அரசு நிறுவனங்களிலிருந்தும் தேசிய வங்கிகளிலிருந்தும் சிறு கடனுதவி பெறுவதற்கும், ஆயுள் காப்பீடு, வைப்பு நிதியிலிருந்து உதவி பெறுவதற்கும், கல்வி, தொழில் முதலானவற்றில் பயிற்சி பெறுவதற்கும் உதவுவதே இத்தகவல் நிலையத்தின் குறிக்கோளாகும். இது பற்றிய தகவல் பெற விரும்பும் மகளிர்,

''சிறப்பு அலுவலர் (தகவல் நிலையம்)
சமூக நல இயக்குநர் அலுவலகம்,
100. பி, அண்ணா சாலை,
நந்தனம், சென்னை—600 035''

என்ற முகவரிக்குத் தங்கள் தேவைகள் குறித்து நேரடியாகவோ கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

# இலக்கியத்தில் ஆடை



செய்யும் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிற்கு நிகரில்லை—வையகத்தில்
தெள்ளு தமிழ்வேதம் செப்பியநாள் சீர்படுத்தும்
வள்ளுவனார் கண்டதல்ல வா.

—வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்.

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றுந்தன் அன்பை முதவோடும்—பற்றி
அரிந்தான் அரிந்திட் டவணிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து.

—புகழேந்திப் புலவர்-(நளவெண்பா.)

நெல்வேலி யார்தந்த சல்லாச் சேலை
நெறிபிடித் துடுத்தினேன் சிங்கா.

—திரிகூட ராசப்பக் கவிராயர் (குற்றாலக் குறவஞ்சி)

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

—திருவள்ளுவர் (திருக்குறள்)

பட்டது கிழிந்த தானால்
பாணருக் காகும்;...

—இராச கோபால மாலை.

உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பிழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத் தென்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை

—பெருவாயின் முள்ளியார் (ஆசாரக் கோவை)

கந்தை ஆகினும் கசக்கிக் கட்டு

—ஔவையார்.

வேட்டியிற் சிறந்தது கைத்தறி வேட்டி—கால
வெற்றிக் கெல்லாம், அதுவே வழிகாட்டி.

—பாவேந்தர் பாரதிதாசன்.


பாரி பறித்த பறியும் பழையனார்க்
காரி கொடுத்த களைக்கொட்டும்—சேரமான்
வாரா யெனவழைத்த வாய்மையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்.

—ஔவையார் (தனிப்பாடல்)

மேலாடை யின்றிச் சபைபுகுந்தா லிந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலுமென் னார்நுவல் பாற்கடலோ
மாலா னவரணி பொன்னாடை கண்டு மகளைத்தந்தே
ஆலா லமீந்தது தோலாடை சுற்று மரன்தனக்கே

—நையாண்டிப் புலவர் (தனிப்பாடல் திரட்டு)








தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), கைத்தறித் துணிகளின் விற்பனையை உயர்த்திட, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

* தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து உற்பத்திப் பொருள்கள் கொள்முதல் செய்தலை அதிகரிப்பதற்கும், விற்பனை வசதியைச் செய்து கொடுப்பதற்கும், போதுமான அளவிற்குக் கடன் பெற, அதன் பங்கு மூலதனத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காக தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பங்கு மூலதனத் தொகையாக ரூ. 20 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளது.

* புதிதாக விற்பனை நிலையங்கள் திறப்பதைத் தவிர முக்கிய நகரங்களில் தற்போது இருக்கும் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தும் பணியையும் மேற்கொள்கிறது. நடப்பாண்டில், இத் திட்டத்திற்காக ரூ. 50 இலட்சம் நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

* 1977 ஜூலை ஆகஸ்ட் மாதத்தில், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குத் தூதுக்குழு ஒன்றினை 'கோ-ஆப்டெக்ஸ்' அனுப்பியது. இத்தூதுக் குழு, சுமார் ரூ. 1 கோடி மதிப்புள்ள சட்டைத் துணிகள், துண்டுகள், கைலிகள் முதலியவற்றை ஏற்றுமதி செய்ய, கேட்பு ஆணைகளைப் பெற்று வந்தது; இவைகளை நிறைவேற்றி வருகிறது.

* தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, பூப்போடும் பெட்டி (Jacquards) போன்ற மேம்படுத்தப்பட்ட நெசவுக் கருவிகளையும் 'கோ-ஆப்டெக்ஸ்' அளித்து வருகிறது.



* நடப்பாண்டில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று, ஆயத்த ஆடை தயாரிப்புத் தொழிற் பிரிவுகளை நிறுவ, 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 17.73 இலட்சம் முதலீடு செய்யப்பட்டு, சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில், இடங்கள் ஒவ்வொன்றிலும் 125 தையல் இயந்திரங்களுடன் 3 தொழிற் பிரிவுகள் நிறுவப்பட்டு வருகின்றன.

* நாளடைவில் ஏற்றுமதி ரகத் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காகக் கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறிகளை 'கோ-ஆப்டெக்ஸ்' மாற்றி வருகிறது. அதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் ரூ. 5 கோடிக்கான ஏற்றுமதி விற்பனையைப் படிப்படியாக எய்த இயலும் என்று நம்பப்படுகிறது.



# மது ஒழிந்தது! மகிழ்ச்சி நிறைந்தது!

தென்காசியை அடுத்த சிற்றூர் கரிசல் குடியிருப்பு! சுற்றிலும் தென்னஞ்சோலையும், கரும்புத் தோட்டங்களும் சூழ்ந்து எழிலான கிராமம்! அவ்வூரைச் சேர்ந்தவர் வள்ளியம்மாள். திருமணமானவர். கணவரும் ஒரு குழந்தையும் உள்ளனர்.


அந்த ஊரில் ஆண்டு முழுவதும் வயல்வேலை கிடைப்பதில்லை. எனவே, பிழைப்புக்கு என்ன செய்வது? வள்ளியம்மாள் குறுக்கு வழியைக் கையாண்டார். சாராயம் காய்ச்சுவதுதான், அந்தத் தேர்ந்தெடுத்த தொழில்! வள்ளியம்மாள் மட்டுமல்ல. கரிசல் குடியிருப்பில் சிலர் இந்த தீய தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

காலம் மாறியது! அவர்களுக்கு மறுவாழ்வு கிட்டியது. சுமார் 6 மாதத்திற்கு முன்பு சாராயத் தொழிலில் ஈடுபட்டோரைப் பிடித்த காவல்துறையினர், அவர்களை வேறு தொழிலில் ஈடுபடுமாறுஅறிவுரை வழங்கினர். ஊரை அழைத்து இது குறித்துப் பேசினர். ஊர்க்கட்டுப்பாட்டின்கீழ் அனைவரும் சாராயம் காய்ச்சும் தொழிலைக் கைவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி இதுவரை சாராயம் காய்ச்சி வந்த வள்ளியம்மாளும், மற்றும் அவ்வூரைச் சேர்ந்த 25 பேர்களும், இத்தொழிலைக் கைவிடுவது என்று உறுதி கூறினர். சரி! இனி என்ன செய்வது? பாரத ஸ்டேட் வங்கியின் (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா) உதவியை நாடினர் காவல்துறையினர். தென்காசியைச் சேர்ந்த ஸ்டேட் பாங்கினர் உடனே அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவ முன்வந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு பால் எருமை வாங்க, ரூ. 1,500 கடன் வழங்கப்பட்டது.

இன்று வள்ளியம்மாள், குடி கெடுக்கும் குடிதொழிலைக் கொண்டிருக்கவில்லை. பால்காரி வள்ளியம்மாளாகி விட்டார். இந்த கடன் அடைபட்டதும் மீண்டும் ஸ்டேட் பாங்கியில் கடன் பெற்று இன்னும் ஓரிரு எருமைகள் வாங்கி தனது வாழ்க்கையை வளமாக்கத் திட்டமிட்டுள்ளார்.

இப்போது அவர்கள் அனைவரது வாழ்விலும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.



**பாரத ஸ்டேட் வங்கியின் (STATE BANK OF INDIA) கடன் உதவித் திட்டத்தின் பயன்களை விளக்குகிறது இக்கட்டுரை.**

இவ்வாறு கிராமப்புறங்களில் நலிந்து கிடக்கும் பாமர மக்களுக்குப் பல்வேறு வகைகளில் கடன் உதவி செய்து ஊக்குவிக்க பாரத ஸ்டேட் வங்கி நாடு முழுவதும் வேளாண்மை வளர்ச்சிக் கிளைகளை ( Agriculture Development Branches ) ஏற்படுத்தியுள்ளது. அந்தக் கிளைகளின் முக்கிய பணி, கிராமப் புறங்களில் உள்ள ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஆகியோர்களுக்கு விவசாயத்தில் மேம்பாட்டையடையவும் சிறு தொழில் செய்யவும், பால் மாடுகள், எருமைகள், ஆடுகள், கோழிகள் ஆகியவைகள் வாங்கி வளம் காணவும் உதவி செய்கின்றன. இவை மட்டுமன்றி, உடல் ஊனமுற்றோர், பெட்டிக்கடை வியாபாரம் செய்வோர், தலையில் சுமந்து சென்று விற்றல்போன்ற சிறிய வியாபாரிகள், நெசவாளர்கள், தச்சர்கள், பனை ஏறுபவர்கள், கூடை முடைபவர்கள் கொல்லர்கள், மீனவர்கள், வேலை கிடைக்காமல் இருப்பவர்கள் வாழ்க்கையில் பின்தங்கிய நிலையிலிருக்கும் பல்வேறு வகைப்பட்ட கிராமமக்களுக்கும் இந்தக் கடனுதவி தரப்படுகின்றன. சாதாரணமாக வட்டிக் கடைக்காரர்களிடம் ஆண்டுக்குச் சுமார் 100 சதம் முதல் 120 சதம் வரை வட்டி கொடுத்து வட்டியில் மூழ்கிக் கிடந்த கிராம மக்களுக்கு, வங்கி மிகவும் குறைந்த வட்டியாக 4 சதவீதம் வட்டி வீதம் பணம் தருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பணம் கொடுத்து உதவுவதுடன், தொழில் நுணுக்கங்களில்

வழிகாட்டவும் செய்கிறது ஸ்டேட் வங்கி. இதற்கு உதவுவதற்காக வேளாண்மைப் பட்டதாரிகளைக் கால்நடை அலுவலர்களாகத் தங்களது கிளைகளில் வங்கியினர் நியமித்துள்ளார்கள். அவர்கள் ஆங்காங்கே கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று நல்ல கால்நடைகளைத் தேர்ந்தெடுக்க உதவுவதுடன் பால் பண்ணைகள் அமைக்கவும் வேளாண்மையில் அறிவுரை வழங்கவும் செய்கிறார்கள்.


இவ்வகையில் ஸ்டேட் வங்கி தமிழ்நாட்டில் சென்ற ஆண்டில் (1977) 4638 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து பண உதவி செய்துள்ளது. இதனால் பயன்பெற்ற விவசாயிகள் 4 இலட்சத்து 37 ஆயிரத்து 351 பேர். சுமார் 44 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப் பெற்றுள்ளது.

இந்தக் கடனுதவி பெற்றுள்ள பலரை நேரில் காணுவதற்காக செங்கல்பட்டு, தென்னார்க்காடு, பாண்டிச்சேரி, காரைக்கால், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பல்வேறு கிராமங்களுக்குப் பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று காட்டினர், பாரத ஸ்டேட் வங்கி நிருவாகத்தினர். ஆங்காங்கு பயன் பெற்ற கிராம மக்களைப் பேட்டி கண்டபொழுது அவர்களது கதை மனத்தைத் தொடுவதாக அமைந்திருந்தது.

தென்னார்க்காடு மாவட்டம் கரிவேப்பிலங்குரிச்சியைச் சேர்ந்தவர் 20 வயது மல்லிகா என்பவர். சிறுவயதில் வந்த 'போலியோ' நோயினால் ஒரு கால் ஊனம் ஏற்பட்டு விட்டது. வயதான பெற்றோர்கள். மல்லிகா படித்ததோ 5-வது வகுப்புவரை தான். குடும்பம் மிகவும் சிரமத்திலிருந்தது.

மல்லிகா, ஸ்டேட் வங்கியின் உதவியை நாடினார். முதலில் 250 ரூபாயும் பின்னர் அதனை அடைத்ததும் மீண்டும் 400 ரூபாயும் தந்தனர். அந்தப் பணத்தில் சிறிய கடை துவங்கி அதில் துண்டுத் துணி வாங்கி விற்கிறார். அத்துடன் ரெடிமேட் ஆடைகளைத் தானே தையல் யந்திரத்தில் தைத்து விற்பனை செய்கிறார். மாதம் ரூ. 300 வருவாய் வருகிறது. ஒரு நாளைக்கு ரூ. 4 வீதம் பணத்தை வங்கிக்குத் திருப்பித் தருகிறார். அதனைச் செலுத்தியவுடன் ரூ. 600 கடன் வாங்கி இன்னும் சற்று விரிவாகக் கடையை நடத்த விரும்புகிறார்,

மதுரையை அடுத்த அரசரடியைச் சேர்ந்தவர் திரு சீனித்தேவர். 10 ஆண்டுகளுக்கு முன் காலில் புண்



சீனித்தேவர்- இரு கால்களையும் இழந்தவர்

வந்து அது சீழ்ப் பிடித்து இரண்டு கால்களையும் இடுப்பளவிலிருந்து நீக்கும்படி ஆகிவிட்டது. இருகாலையும் இழந்து வாழும் வகையறியாது தவித்துப் போயிருந்த இவருக்கு இந்த வங்கி ரூ. 200 கடன் தந்தது. இன்று அவர் நெடுஞ்சாலையில் இளநீர் வியாபாரம் செய்கிறார். நாள் ஒன்றுக்குச் சுமார் 8 ரூபாய் வருமானம் வருகிறது. மூன்று சக்கர வண்டியில் ஏறி இளநீர் வாங்கி வருகிறார். வங்கிக்கும் இவரே நேரில் சென்று பணத்தைச் செலுத்துகிறார்.

வெயில் காலத்தில் இளநீர் வியாபாரம். மழை காலத்தில்? ''கோழி வியாபாரம் செய்ய வேண்டும்'' என்கிறார் சீனித்தேவர்.

''முன்பு சாப்பாட்டுக்கு வழியின்றி நானும் எனது குடும்பமும் (மனைவி, இரண்டு பெண்கள்) திண்டாடினோம். இன்று வயிறாரச் சாப்பிடுகிறோம்'' என்கிறார் நன்றியுடன்.

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது கிருஷ்ணாபுரம். அபூர்வமான சிலைகளுக்குப் பெயர்போன கோயிலையுடைய ஊர். கிருஷ்ணாபுரத்தை ஒட்டியுள்ள கிராமம் நொச்சிகுளம். தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் மறவர்களும் வாழும் ஊர். அனைவரும் வேளாண்மைத் தொழிலாளர்கள், முன்பு எப்போதும் இந்த இரு பிரிவினரிடையேயும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் உண்டு. ஒற்றுமையின்றி ஏழ்மையில் மூழ்கிக் கிடந்தனர்.

இன்று அவர்கள் நண்பர்கள். அனைவரும் ஒன்று சேர்ந்து பால் பண்ணை நடத்துகிறார்கள். இந்த அதிசயம் எவ்வாறு நிகழ்ந்தது?



வங்கியின் உதவியால் வாங்கின கறவை மாடுகள்


ஸ்டேட் வங்கியின் உதவியால் தான் என்கிறார், கிராமத் தலைவர் பால்சாமி. இவர் முன்னாள் ஊராட்சித் தலைவர். 2 ஆண்டுகளுக்கு முன் ஊரார் சுமார் 60 பேர் ஒன்று சேர்ந்து ஆளுக்கு 2 மாடு வீதம் வாங்குவதற்குத் தலைக்கு ரூ. 3,000 கடன் வாங்கி 105 கறவை மாடுகள் (எருமை) வாங்கினர். பால் பண்ணையைத் துவக்கினர். இன்று அனைவரும் ஒற்றுமையாக மகிழ்வோடு வாழ்கிறார்கள். வருங்கால வாழ்வு வளமாக இருக்கும் என்ற நம்பிக்கை அவர்களிடம் ஒளி வீசுகிறது.

கிருஷ்ணாபுரத்தை அடுத்த மேய்ச்சல் வெளியில் சுமார் 500 செம்மறி ஆடுகள் மேய்கின்றன. ''இவை அனைத்தும் ஸ்டேட் வங்கியின் உதவியுடன் வாங்கியவைதான். ஒருவருக்கு 26 ஆடுகள் (1 கிடா 25 பெண் ஆடுகள்) வீதம் 18 பேருக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அதுமட்டும் அல்ல; திருநெல்வேலி; பாளையங்கோட்டைப் பகுதிகளில் பால் கறக்கும் மாடுகளில் மூன்றில் ஒரு பங்கு எங்களது உதவியுடன் வாங்கப்பட்டதுதான்'' என்று பூரிப்புடன் விளக்கினார் திருநெல்வேலி கிளை வங்கியின் மேலாளர் திரு அப்துல் சமது.

காரைக்காலை அடுத்த வரிச்சிக்குடி கிராமத்தில் நிலமற்ற 44 அரிசன மக்களுக்குப் பயிரிடுவதற்காக, அரசு, புன்செய் நிலத்தை வழங்கியது. அவர்கள் அந்த வட்டார ஸ்டேட் வங்கியில் கடன் பெற்று விவசாயம் செய்கின்றனர். நிலக்கடலை, எள்ளு, காராமணி போன்ற பயிர்கள் பயிரிட்டு வருகின்றனர். முன்பு கூலி வேலை செய்து வந்தபோது மாதம் 90 ரூபாய்தான் ஒருவருக்கு வருமானம் வந்தது. தற்போது வேளாண்மையில் சொந்தப் பயிர் செய்த பின் 200 ரூபாய் வரை மாதம் கிடைக்கிறது.

பட்டதாரி இளைஞர்களுக்கும் இந்தக் கடன் உதவி, பெரும்

பால்பண்ணைக்கு வங்கியின் உதவியால் பெற்ற சைக்கிள்கள்





மகளிர் மன்றத்தினருக்கு வங்கியின் உதவி

வாய்ப்பாக அமைந்துள்ளது. பெண்ணாடத்தைச் சேர்ந்த திரு. ராஜசேகரன் பொறியியல் பட்டப் படிப்பு படித்தவர். பெண்ணாடம் சர்க்கரை ஆலைக்கு எதிரே டிராக்டர் பழுதுபார்க்கும் தொழிற்கூடம் துவங்கியுள்ளார். இவருக்கு 1973-ஆம் ஆண்டு ஸ்டேட் பாங்க் ரூ, 70,000 கடனாகக் கொடுத்து உதவியது. இதுவரை ரூ. 30,000 திருப்பி அளித்து விட்டார். இவருக்கு மாதம் சுமார் 1,500 ரூபாய் வருமானம் வருகிறது. சர்க்கரை ஆலை கரும்பு ஆட்டும் மாதங்களில் இன்னும் அதிக அளவு வருமானம் வரும் என மகிழ்வுடன் குறிப்பிட்டார் 33 வயதான திரு சந்திரசேகர். பிறரிடம் வேலை தேடி அலைந்து வருமானத்திற்குச் சிரமப்படுவதைவிட இது திருப்திகரமாகவும், மனநிறைவு தருவதாகவும் இருக்கிறது என்கிறார் அவர்.

திருவள்ளூரை அடுத்த மித்தினமல்லியில் ஸ்டேட் பாங்க் உதவி பெற்று கோழிப் பண்ணை துவங்கியிருக்கிறார், திரு சுர்சித்சிங். இவர் முன்னாள் இராணுவ வீரர். விமானப் படையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பஞ்சாலையைச் சேர்ந்த திரு சுர்சித்சிங் மித்தினமல்லியில் குடியேறியிருக்கிறார். தற்போது 1,500 கோழிகள் வளர்க்கிறார். சரியான முறையில் பராமரிப்பதால் நல்ல வருமானம் வருகிறது எனப் பூரிப்புடன் குறிப்பிட்டார்.

அன்றாடம் வீட்டில் இட்லி சுட்டு விற்பவர், வாத்து மேய்ப்பவர் போன்று பல்வேறு தரப்பட்ட நலிந்து கிடக்கும் மக்களுக்கு வாழ்வளிக்கும் திட்டமாக இந்தத் திட்டம் உள்ளது.

இதில் இன்னொரு மகிழ்வு தரும் செய்தி என்னவென்றால், எல்லாப் பகுதிகளிலும் கடன் பெற்றுள்ள இந்தக் கிராம மக்கள் வாழ்க்கையில் மிகவும் தாழ்ந்த நிலையிலிருப்பவர்கள். ஆனால் அனைவரும் இந்தக் கடன் தொகையைச் சிறிதும் தவறாமல் தவணையில் ஒழுங்காகக் கட்டுகின்றனர். ஸ்டேட் வங்கியுடன் மிகவும் ஒத்துழைக்கின்றனர். இது இந்தத் திட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும் என்று குறிப்பிட்டார் ஸ்டேட் வங்கியின் மக்கள் தொடர்பு மேலாளர் திரு சூரிய நாராயணன்.

''விவசாயிகளுக்கு வேளாண்மையில் உதவுவது தவிர பொதுவாகக் கிராமங்களில் பல்வேறு துறைகளில் உதவுவதற்கு, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) என்று ஒரு திட்டம் உள்ளது. இது மிகவும் விரிவான திட்டம்! பள்ளிகளில் ஸ்டேட் வங்கி என்ற திட்டத்தின் கீழ் 522 பள்ளிகளைச் சேர்ந்த 56,313 மாணவர்களுக்குப் புதிதாக எங்களது வங்கியில் கணக்குத் துவங்கச் செய்திருக்கிறோம். இதேபோன்று, குடிசைப் பகுதிகள், மலைப் பகுதிகள் போன்று பல்வேறு பகுதிகளில் உதவி வருகிறோம். " இதற்காக 25 பகுதிகளைத் தேர்ந்தெடுத்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 7,499 வீடுகள் பலன் பெறும், வருகிற 78-79 ஆம் ஆண்டில் இதற்காக 1 கோடியே 34 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்'' என்று வங்கி அலுவலர் திரு ராஜாராம் தெரிவித்தார்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஏழை மக்கள் வாழ்வில் ஒளியேற்ற வழி வகை செய்கிறது என்பதற்கு மேலே கூறியுள்ள உண்மை அனுபவங்களே சான்றாகும்.

—கே. நடராஜன்.



# உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக..!

மக்கள் தொகையில் ஏறத்தாழப் பத்து சதவிகிதத்தினர் ஏதோ ஒருவகையில் ஊனமுற்றவர்களாக இருக்கின்றனர். காது கேளாதவர்கள் பார்வை குன்றியவர்கள், ஊமைகள், கைகால் ஊனமுற்றவர்கள் போன்றவர்கள் மனிதர்களாக வாழ உரிமையை அளிப்பது நாகரிக சமுதாயத்தில் கடமையாகும்.

உடல் ஊனம் என்பது வாழ்க்கையின் வெற்றிக்கு ஒரு தடையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உடல் ஊனமுற்றோர்கள் தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல் அவர்களுடைய உழைப்பும் திறமையும் சமுதாயத்திற்கு உதவும் என்கிற எண்ணத்தை அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

உடல் ஊனமுற்றோரும் சமுதாயத்தில் மதிப்புடன் வாழப் பல்வேறு நற்பணிகளைத் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசு உடல் ஊனமுற்றோரின் நல்வாழ்வுக்குச் செய்துவரும் திட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:—

**நவீன முறைப் பயிற்சி-உற்பத்தித் தொழிற்சாலை முட்டுக்காடு**

உடல் ஊனமுற்றோர் மறுவாழ்விற்காக தமிழக அரசு நவீன முறைப் பயிற்சி உற்பத்தித் தொழிற்பட்டறையைச் சென்னை மாமல்லபுரம் சாலையில் முட்டுக்காடு என்ற இடத்தில் அமைத்துள்ளது. 1975-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத்தொழிற்பட்டறை செயல்படத் தொடங்கியது. 1976-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இத்தொழிற்பட்டறையில் சேர்க்கப்பட்ட 28 பேர் முதல் குழுவில் தமது பயிற்சியினை முடித்து இத்தொழிற் பட்டறையிலே தற்போது நாட்கூலிப் பணியாட்களாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனர். தற்போது இரண்டாம் குழுவினரில் 27 பேரும் மூன்றும் குழுவில் 20 பேரும் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் எளிய . பொறியியல் ரகங்கள், கட்டுமானப் பணிகள், உதிரிப் பாகங்கள் செய்தல் போன்ற உற்பத்திப் பணிகள் இத் தொழிற் பட்டறையில் செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலை ஒரு வணிக நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற 29 மகளிருக்கு ஸ்திரி சேவா மந்திரில் பயிற்சி அளிக்கப்படுகிறது. செவிடு ஊமைப் பெண்களுக்கு, பொம்மை செய்தல், பூ வேலை, ஆடை தைத்தல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. கண் பார்வையற்ற மகளிருக்குப் பாய் முடைதல், ஆடை நெய்தல் ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. ஊனமுற்ற மகளிருக்குச் சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இதுவரை 3,500 மூன்று சக்கர வண்டிகளும், 1,325 கேட்பு உதவிச் சாதனங்களும் (Hearing aids) கொடுக்கப்பட்டுள்ளன.

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், ஊமை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், செவிடு, ஊமை, குருடு மேலும் கண்பார்வையற்ற உடல் ஊனமுற்ற குழந்தைகள்; 8-16 வயது வரம்பிற்குட்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியமாக ரூ. 40,000 கொடுக்கப்பட்டுள்ளது. தொழுநோயால் துன்புறும் குழந்தைகள், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளைப் பராமரிக்க மேலும் ரூ. 40,000 கொடுக்கப்பட்டுள்ளது.

மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு, ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக பால விகாருக்கு ரூ. 45,600 மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

செவிட்டுக் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு ஆசிரியர்களின் பயிற்சிக்காக, சென்னையிலுள்ள செவிடர்கள் பள்ளிக்கு ரூ. 65,000 மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

1977-78-ல் கண் பார்வையற்ற 40 பெண்களுக்காகக் கூரை வேய்ந்த தொழிற்கூடம் ஒன்று சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.


சென்னை நகரத்திலுள்ள கண் பார்வையற்றவர்கள், நகரத்தினுள் பல்லவன் போக்குவரத்துக் கழகப் (பெருநகர்ப்பிரிவு) பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளி செல்லும் காது கேளாத ஏழை மாணவர்களுக்கு காதுகேட்கும் கருவிகள் 300, 1978-79-ல் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1978-79-ஆம் ஆண்டு, கால் ஊனமுற்றவர்களுக்காக 500 மூன்றுசக்கரவண்டிகள் தயாரித்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை**

இந்திய அரசு, 14--30 வயது வரம்பிற்குட்பட்ட உடல் ஊன முற்ற மாணவர்களுக்கு 9-வது வகுப்பிலிருந்து தொடங்கி மேல் படிப்புக்கு 31-3-1977 வரை உதவித்தொகை அளித்து வந்தது. 1-4-1977 முதல் இந்தத் திட்டம் மாநில அரசின் சமூக நல இயக்கு நரிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. 1-4-1977 தேதிக்கு முன் மாநில அரசும் கல்லூரிப் படிப்பு படிக்கும் உடல் ஊனமுற்ற 112 மாணவர்களுக்கு உதவித் தொகை அளித்து வந்தது.



1-4-1977 முதல் உதவித்தொகைத் திட்டம் மாநில அரசால் செயல் படுத்தப்படுவதால் 1-4-1977க்கு முன் இருந்த மாநில அரசுத் திட்டம் கைவிடப்பட்டது.

**பள்ளிகளில் உடல் ஊனமுற்ற சிறுர்களின் ஒருங்கிணைப்பு**

மத்திய அரசுத் திட்டத்தின் கீழ், மாநில அரசு 1977-78-ஆம் ஆண்டு பள்ளிகளில் படிக்கும் சிறுர்களின் ஒருங்கிணைப்புக்காக ரூ. 1,63,200 ஒப்பளித்தது. இத் திட்டம் எட்டு சாதாரணப் பள் ளிகளில் ஒரு சோதனைத் திட்டமா கச் செயல்படுத்தப்படும். அரை குறைப் பார்வையுள்ள, சிறிதே காது கேளாத, உணர்ச்சி வசப் படுவதால் பாதிக்கப்பட்ட, காக்காய் வலிப்பால் அவதியுறும் மற்றும் உடல் ஊனமுற்ற பிள்ளை கள் சாதாரணப்பள்ளிகளில் கல்வி வசதி அளிக்கப்படுவர். அவர் களுக்கு மூக்குக் கண்ணுடிகள், கேட்புச் சாதனம், படிக்க உத வும் கருவிகள் முதலியவையும், பயணச் செலவுகள், புத்தகங்கள் சிலேட்டுகள் ஆகியவையும் அளிக் கப்படும். 80 சிறுர்கள் இத்திட் டத்தால் பயன் பெறுவர்.

**உடல் ஊனமுற்ருேருக்கான மாநில வாரியம்**

உடல் ஊனமுற்ருேருக்கான மாநில வாரியம் மூன்று ஆண்டு களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. அதன் நோக்கங்களா வன:—

(1) உடல் ஊனமுற்ருேரின் மறுவாழ்வுக்காக அவர்களின் பிரச்சினைகளை ஆராய்வது;

## ஊனமுற்ருேருக்கு உதவுவது நாகரிகத்தின் அடிப்படை....

இங்கர்சால் சொன்னுர்: "ஒருவன் தனக்காகக் கோரும் உரிமைகள் அனைத்தையும் பிறருக்கு வழங்குவதுதான் நாகரிகம்" என்று. ஆனுல், பெரும்பாலோர் தாங்கள் கேட்கும் உரிமைகளைப் பிறருக்கு வழங்குவதில்லை. இந்தச் சுயநல மனப்பான்மை, நாம் உடல் ஊனமுற்றவர்களிடம் நடந்து கொள்ளும் முறையிலிருந்து நன்கு வெளிப்படுகிறது.

சமுதாயத்தில் உடல் ஊன முற்றவர்களுக்கு மதிப்புக்குரிய இடம் அளிக்க வேண்டும் என்பது நீதி, அன்பு, தொண்டு என்ற பண்புகளின் அடிப்படை யில் அமைந்ததாகும். இதுவே உண்மையான நாகரிகத்திற்கு அடிப்படையாகும்.

குருடர், செவிடர், ஊமை ஆகியோரைப் பேணுவதுதான் உண்மையான நாகரிகம் என்று பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர்கள் கூறியுள்ளனர்.



ஊமையர், செவிடர் பள்ளியில் கற்பிக்கும் முறை

# உலக ஊனமுற்றோர் நாள்

தெளிவான விவரங்கள் இல்லாவிட்டாலும் நம் நாட்டில் நம் நாட்டு மக்களில் சுமார் பத்து சதவீதத்தினர் ஏதோ ஒருவகையில் உடல் அல்லது உள்ளத்தில் ஊன முற்றோர்களாக இருப்பதாக நம்பப்படுகிறது.

நம் நாட்டில் ஏறத்தாழ 20 ஆயிரம் உடல் ஊனமுற்ற குழந்தைகள், முதியோர்கள் கல்விப்பயிற்சி பெறுகின்றனர். ஏறத்தாழ 20 ஆயிரம் பேர்கள் உழைத்து ஊதியம் பெறு கின்றனர். மீதியிருப்போர் சமுதாயத்தால் புறக்கணிக் கப்பட்டு நேரத்தை வீணாகக் கழிக்கின்றனர்.

உடல் ஊனமுற்றோர்களில் சிலவகையினருக்கு வேலைவாய்ப்பு வழங்கிட 1974-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசும், சில மாநில அரசுகளும் முயற்சிகளை மேற்கொண் டுள்ளன. இப்போது இந்தத் துறையில் பணியாற்றும் தனிப் பட்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் வழங்கி வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதி களில் உள்ள பள்ளிகளில் ஏறத்தாழ 7000-க்கும் மேற்பட்ட உடல் ஊனமுள்ள மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

உடல் ஊனமுற்றவர்களுக்காகத் தனியாக 17 வேலைவாய்ப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. சில பொதுநலத் தொண்டு நிறுவனங்களும் உடல் ஊனமுற்றவர் களுக்கு வேலை ஏற்படுத்துவதில் உதவி செய்து வருகின்றன.

நாட்டிலுள்ள நான்கு கோடி உடல் ஊனமுற்ற மக்களின் நிலையைப் பற்றி மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான ஒவ்வோர் ஆண்டும் மார்ச் திங்கள் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை உலக ஊனமுற்றோர் நாளாகக் கொண்டாடப் படுகிறது.

இவ்வாண்டு மார்ச் 19 ஆம் நாள் நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

(2) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றோரின் முன்னேற்றத்திற்காக வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குதல்.

(3) உடல் ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பை ஊக்குவித்தல்;

(4) உடல் ஊனமுற்றோருக்கும், நலப் பணிகளிலும் ஈடுபடும் தனியார் நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிப்பது பற்றி ஆராய்தல்.

(5) உடல் ஊனமுற்றோரின் கல்வி, பயிற்சி மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்கள் புரியும் பணிகளை ஒருங்கிணைத்தல்.

**உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை**

இந்த வாரியத்தின் முதல் கூட்டம் 26-10-1977-ஆம் நாளன்று நடந்தது. வாரியத்திற்கான சட்ட திட்டங்கள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. உடல் ஊனமுற்றோருக்கும் அவர்களின் நலன்களுக்காகப் பாடுபடும் நிறுவனங்களுக்கும், மானியம்-கடன் வசதியளிக்க ரூ. 50,000 இந்த வாரியத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாரியம் ஒரு தனி நபருக்கு ரூ. 1,000 வரை மானியம் கடன் வழங்கலாம். ஒரு நிறுவனத்திற்கு ரூ. 10,000 வரை மானியம்-கடன் வழங்கலாம். ரூ. 10,000-க்கு மேல் உள்ள மானியம்-கடன் ஒப்பளிப்பது, அரசால் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறு பல்வேறு வகைகளிலும் ஊனமுற்றோரின் நல்வாழ்வுக்கான அரும்பணிகளைத் தமிழ் நாடு அரசு ஆற்றி வருகிறது.

(தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்கப் பெற்ற கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.)

# ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிப் பணம்!

மொழி, இலக்கியம், சமூக, விஞ்ஞானம் ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்வதற்காக உதவித் தொகை 161 பேர்களுக்கு வழங்க பல்கலைக்கழக மானியக் குழு முடிவு செய்துள்ளது.

இவர்களுக்கு மாதம் 400 ரூபாய் தவிர ஆண்டு ஒன்றுக்கு அவசர செலவுக்காக 1500 ரூபாய் உதவித் தொகையாக 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

உருதுமொழி ஆராய்ச்சிக்கு குமாரி எம். கே. சுல்தானு (சென்னைப் பல்கலைக்கழகம்), தமிழ் ஆராய்ச்சிக்கு எஸ். அமிர்தலிங்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்), ஏ. ஆதித்தன் (மதுரைப் பல்கலைக் கழகம்), வரலாறு ஆராய்ச்சிக்கு குமாரி ஷீலா ஸ்ரீநிவாசன் (சென்னைப் பல்கலைக் கழகம்) ஆகியோர் இந்த உதவித் தொகை பெறும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்



# எல்லார்க்கும் எல்லாம் கிடைத்திட...!

சென்னைப் பாரிமுனையிலுள்ள 'குறளகம்' கட்டடத்தினுள் நுழைகிறோம்!

ஆடவர், பெண்டிர், குழந்தைகள் முதலானோர் திரள் திரளாகச் செல்கின்றனர். அவர்களுடன் மேலைநாட்டிலிருந்து வந்துள்ள சுற்றுலாப் பயணிகளும் தென்படுகின்றனர்.

வண்ண வண்ணக் கதராடைகள், வகை வகையான பொம்மைகள், கண்ணைக் கவரும் கைவினைப் பொருள்கள் எத்தனை எத்தனை காட்சியளிக்கின்றன அங்கே!

ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக் கொண்டே செல்கிறோம். எல்லாப் பொருள்களும் நம்மைக் காந்தமென ஈர்க்கின்றன. எல்லாவற்றையும் வாங்க வேண்டும் என்ற ஆவல் நம்மை உந்தித் தள்ளுகிறது!

குறளகத்திலுள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் அங்காடிக்குச் சென்றால் பொழுது போவதே தெரியவில்லை; அதோடு பயனுள்ள பொருள்களை வாங்காமலும் நாம் வெளியே வருவதில்லை!

ஏழை எளிய மக்களால் உருவாக்கப்படும் எண்ணற்ற கைவினைப் பொருள்கள் எப்படியெல்லாம் தயாராகி வருகின்றன? இதற்குத் துணையாக நிற்கும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் வரலாறு, அது ஆற்றிவரும் அரும் பணிகள் என்னென்ன என்பது பற்றியெல்லாம் தெரிந்து கொள்வது, நம் பொதுஅறிவுக்குத் துணை புரியும் அல்லவா?

**முதல் மாநில அரசு!**

1946-ஆம் ஆண்டில் கதர்த் திட்டத்தை மேற்கொண்ட முதல் மாநில அரசு தமிழ்நாடு அரசாகும். சர்வோதய சங்கத்திலிருந்து மாற்றப்பட்ட கிட்டத்தட்ட 1,800 நூற்பாளர்கள், 500 கதர் நெசவாளர்களைக் கொண்டு தீவிர கதர்த் திட்டம் தொடங்கப்பட்டது. 1956-ல் கதர்த் துறை என்று தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டது.

தேசிய அளவில், கதர், கிராமத் தொழில்கள் வளர்ச்சியின் முக்கியத்துவமும் அவசியமும், உணரப்பட்டதால் இந்திய அரசு 1956-ல் கார்வே குழுவை அமைத்தபோது இதற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. அக்குழுவின் பரிவுரையின்படி, திட்ட ஆணைக்குழு இத்துறையின் வளர்ச்சிக்குப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டம், அனைத்திந்திய கதர்-கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது இந்த வாரியம் ஆலோசனை வழங்கும் அமைப்பாக இருந்தது.

ஆலோசனை வாரியத்திற்குக் குறைந்த அதிகாரங்கள் இருந்ததை உணர்ந்து கொண்டும், கதர்-கிராமத் தொழில்கள் விரைவில் வளர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும், இந்திய அரசு, 1957-ல் கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு என்றழைக்கப்படுகிற சட்டப்படியான ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. நாட்டு அளவில் ஆலோசனைக் குழு எதிர்நோக்கிய பிரச்சினைகளை மாநில அரசுகள் உணர்ந்து, கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு அறிவுரையின்படியும் பரிவுரையின்படியும், கதர்-கிராமத் தொழில் வளர்ச்சிக்காகச் சட்டப்படியான வாரியங்களை அமைத்தன.

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959ல் நிறைவேற்றப்பட்டது. முன்னர் கதர்த் துறையாலும் தொழில் வணிகத் துறையாலும் மேற்கொள்ளப்பட்ட கதர்-கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 1960 ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் அமைக்கப்பட்டது.

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும்!

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்:*

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

## முக்கியப் பணி என்ன ?

பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது உட்பட, கதர்-கிராமத் தொழில் உற்பத்தி, வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரிப்பது வாரியத்தின் முக்கிய அலுவல்களாகும். இதனைத் தவிர, கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், இதற்குத் தொடர்பான பொருட்கள் அனைத்தையும் இயன்றவரையில் இவ்வாரியம் கவனிக்கிறது.



கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவின் ஆட்சி வரம்புக்குள் வரும் தொழில்கள் என்னென்ன என்பது பற்றித் தெரிந்து கொள்வோமா?

1. கதர், 2. சிறு தானியங்களையும், பருப்பு வகைகளையும் செயல் முறைப்படுத்துதல், (3) கிராம செக்கு எண்ணெய், (4) கிராமத் தோல் தொழில், (5) தீப்பெட்டித் தொழில் (குடிசைத் தொழில்), (6) கரும்பு வெல்லம், கண்டசாரி தயாரித்தல், (7) பனை வெல்லம் தயாரித்தல், பிற பனைப்பொருட்கள் தயாரித்தல் (8) சமையலுக்கு உதவாத எண்ணெய், சோப்பு, (9) கையால் தயாரிக்கப்பட்ட தாள், (10) தேனீ வளர்த்தல், (11) கிராம மட்பாண்டத் தொழில், (12) நார், (13) தச்சுத்தொழிலும், கருமார் தொழிலும், (14) சுண்ணாம்பு தயாரித்தல், (15) உரம், மீத்தேன் வாயு தயாரித்தலும், பயன்படுத்தலும், (16) மருந்துக்காக வனச்செடிகளையும், பழங்களையும் சேகரித்தல், (17) பழங்களைப் பதப்படுத்தல், பாதுகாத்தல், (18) பிரம்பும், மூங்கிலும், (19) அலுமினிய வீட்டுச் சாமான்களைத் தயாரித்தல், (20) 'கத்தா' தயாரித்தல், (21) மரப்பிசினையும், ரெசினையும் தயாரித்தல், (22) அவலரக்கு (Shellac).

கதர் ஆணைக்குழுவிடமிருந்து நிதியுதவியைப் பெறாமல், மாநில அரசு அனுமதித்துள்ள கீழ்க்காணும் தொழில்களுக்கும் கூடுதலாக வாரியம் உதவி செய்து வருகிறது.

1. அகர்பத்தி, 2. சிகைக்காய் தூள், 3. பற்பொடி, 4. நீலகிரித் தைலம்.

இத்திட்டங்களை வாரியம், துறைப் பிரிவுகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட கைத்திறப் பணியாளர்கள் மூலமும் செயற்படுத்துகிறது.

## கவின்மிகு கதர் உற்பத்தி


துறைப் பிரிவுகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. வாரியம் கச்சாப் பட்டிலிருந்து கதர்ப் பட்டுத் துணியையும் உற்பத்தி செய்கிறது. கிஸான் நூல், அம்பர் நூல் ஆகியவற்றை வாரியம் வாலாயமான நூற்போரிடமிருந்து வாங்குகிறது. கிராம நூற்பு நிலையங்களில், உற்பத்தியை ஒட்டி ஊதியம் வழங்கும் அடிப்படையில் வாரியம், நூலை உற்பத்தி செய்கிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நூல், நெசவாளர்களுக்குக் கதர்த் துணி நெய்வதற்கு வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 305 கிராம நூற்பு நிலையங்கள் உள்ளன. இவை 6 கதர் இராட்டை கொண்டு நூல் உற்பத்தி செய்கின்றன. 1977-78-ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கு 325.25 இலட்சம் சிட்டங்களாகும். 1977-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் முடிய வாரியம் 246.59 இலட்சம் சிட்டங்கள் நூலை உற்பத்தி செய்துள்ளது. தற்போது கிராம நூற்பு ஆலைகள் நிலையங்கள் மூலம் 9,760 நூற்போருக்கு வேலை கிடைக்கிறது. இந்த நூற்பு நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 முதல் ரூ. 3.00 வரை ஊதியம் கிடைக்கிறது.



## வகை வகையான ஆடைகள்:

கண்ணைக் கவரும் பல்வேறு ஆயத்த உடைகளையும் வாரியம் தயாரித்து வருகிறது. இத்துணிகளைப் பொதுமக்கள் மிகவும் விரும்பி வாங்குகின்றனர். 17.23 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இவ்வகைத் துணிகள் 1977-78-ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (அதாவது 1977-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையில்) தயாரிக்கப்பட்டன. அதே காலத்தில் 25.99 இலட்சம் ரூபாய் மதிப்



புள்ள உடைகள் விற்கப்பட்டன. 1978-79-ஆம் ஆண்டிற்கான தயாரிப்பு இலக்கு 25 இலட்சம் ரூபாயாகும்.

மேலும் பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் வாங்கும் பொருட்டு 98.44 இலட்சம் மதிப்புள்ள பூப்போட்ட கதர்த் துணிகளையும் வாரியம் விற்பனைக்கு வெளியிட்டதில் ரூ. 63.23 இலட்சம் மதிப்புள்ள கதர்த் துணிகள் 1977-ஆண்டு காந்தி ஜெயந்தி, தீபாவளி மற்றும் பக்ரீத் பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் முழுவதும் பரந்து அமைந்துள்ள 155 விற்பனைப் பிரிவுகள் மூலம் துணிகளை இவ்வாரியம் விற்பனை செய்து வருகிறது. இதில் 4 கதர் விற்பனை முக்கிய நிலையங்களும் அடங்கும். இந்நான்கு நிலையங்களில் இரண்டு நிலையங்கள் சென்னையிலும், திருச்சியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. 1976-77-ஆம் ஆண்டில் 405.55 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர்த்துணிகள் விற்பனையாயின. கதர்த்துணிகள் விற்பனை 30-11-1977-ஆம் நாள் வரையில் 524.44 இலட்சம் ரூபாயாகும். இந்த விற்பனை 1977-78 ஆம் நிதியாண்டின் இறுதியில் 578 இலட்சம் ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1977-78-ஆம் ஆண்டுக்கான உற்பத்தி 525 இலட்சம் ரூபாயாகும். 1978-79ஆம் ஆண்டில் இந்த உற்பத்தி 575 இலட்சம் ரூபாயை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டிற்கான விற்பனை இலக்கு 600 இலட்சம் ரூபாயாகும்.

**மாநில அரசால் அளிக்கப்பட்ட சிறப்புத் தள்ளுபடி :**

வாரியத்தினாலும், தமிழ்நாட்டிலுள்ள சான்றளிக்கப்பட்ட ஏனைய கதர் நிலையங்களாலும் விற்பனை செய்யப்பட்ட கதர்த் துணிகளுக்கு 1976-77ஆம் ஆண்டில் தீபாவளிக் காலத்தில் அரசு 5 சதவீத சிறப்புத் தள்ளுபடி வழங்கியது. காந்தி பிறந்த நாள் தீபாவளி, பொங்கல் ஆகிய காலங்களில் வாரியத்தால் விற்பனை செய்யப்பட்ட கதர்த் துணிகளுக்கு 10 சதவீதத் தள்ளுபடியையும் ஏனைய சான்றளிக்கப்பட்ட கதர் நிலையங்களால் விற்பனை செய்யப்பட்ட கதர்த்துணிகளுக்கு 5 சதவீதத் தள்ளுபடியையும் 1977-78ஆம் ஆண்டில் மாநில அரசு வழங்கியது.


அரசு அளித்த உயர் தள்ளுபடியாலும், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளித்த உயர் தள்ளுபடியாலும், துணிகளை வாங்குவோருக்குப் பருத்திக் கதர்த் துணிகளுக்கு 30 சதவீதத் தள்ளுபடியையும், பட்டுக் கதர்த் துணிகளுக்கு 15 சதவீதத் தள்ளுபடியையும், கம்பளக் கதர்த் துணிகளுக்கு 20 சதவீதத் தள்ளுபடியையும், வாரியத்தால் அளிக்க முடிந்தது. உயர் தள்ளுபடி அளித்ததன் விளைவாகக் கதர்த் துணிகள் விற்பனை மேற்குறிப்பிட்டபடி கணிசமான அளவிற்கு அதிகரித்தது.

கதருக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ், 1977-78 ஆம் ஆண்டில் அரசு, 2.00 இலட்சம் ரூபாய் (1.50 இலட்சம் ரூபாய் மானியம் 0.50 இலட்சம் ரூபாய் கடன்) வழங்கியது. தறி ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு அதிகப்படாமல் பண்ணை, விழுதுகள் ஆகியவற்றைக் கதர் நெசவாளர்கள் வாங்குவதற்கு நிதியுதவி செய்ய இத்திட்டம் வகை செய்தது. இத்தொகையில் 75 சதவீதம் உதவித் தொகையாகவும், எஞ்சியுள்ள 25 சதவீதம் கடனாகவும் அளிக்கப்படும். இத்திட்டத்தால், 4,000 தறிகள் பயனடையும்.

நூற்போர், நெசவாளர்கள் சிட்டத்தில் நூலைச் சுற்றுவார்கள், சாயம் போடுபவர்கள், வெளுப்பவர்கள், தையற்காரர்கள். முதலியவர்கள் போன்ற ஏறத்தாழ அரை இலட்சம் பேருக்கு (பகுதி நேர, முழு நேர) கதர்த் திட்டங்கள் வேலை வாய்ப்பளிக்கின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 200 இலட்சம் ரூபாய் ஊதியமாக வழங்கப்படும்.

**வளரும் கிராமத் தொழில்கள் :**

கிராம ஏழ்மை நிலையைப் போக்கவும், உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களையும், ஆட்படை ஊற்றத்தையும் பயன்படுத்தவும், நுகர்வோர்களது தேவைகளுக்கு, குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ளவர்களின் தேவைகளுக்குப் பொருட்களை வழங்க வகை செய்யும் வண்ணம் கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன.





கீழ்க்காணும் கிராமத் தொழில்களை, துறையின் பிரிவுகள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் வாரியம் நடத்தி வருகிறது.

(1) பனைவெல்லம், (2) கைக் குத்தல் அரிசி (தானியங்களையும் பருப்பு வகைகளையும் பதப்படுத்துதல்), (3) நாட்டுச்செக்கு எண்ணெய், (4) நாட்டுத் தோல், (5) மட்பாண்டங்கள், செங்கற்கள், ஓடுகள், (6) சுண்ணாம்பு (7) தேனீ வளர்த்தல், (8) தச்சு-கருமார் தொழில், (9) பழங்களைப் பதப்படுத்துதலும் பாதுகாத்தலும், (10) கையால் செய்யப்பட்ட காகிதம், (11) குடிசைத் தொழில் தீப்பெட்டி, (12) வெல்லம், கண்டசாரி சர்க்கரை, (13) சமையலுக்கல்லாத எண்ணெய், சோப்பு, (14) நார்த் தொழில், (15) கிராமப் பொருட்கள் விற்பனை நிலையம், (16) பிரம்பு, மூங்கில்.

முன்பு குறிப்பிட்டது போல, கதர், கிராமத் தொழில் வாரியம் தனிப்பட்ட தொழில் கைவினைஞர்களுக்கும் ஆதரவு தருகிறது.

கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து கிடைக்கப் பெறும் நிதியுதவியின் அளவைக் கொண்டு மாநில அளவில் கிராமத் தொழில்கள் சிலவற்றிற்குக் குறுகிய காலக் கடன்களையும் மாநில அரசு வழங்குகிறது.

**பாங்கான பனைவெல்லத் தொழில்!**

வாரியம் மேற்கொண்டுள்ள கிராமத் தொழில்களில் பனைவெல்லம் தயாரிக்கும் தொழில் பெருந் தொழிலாகும். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இத்தொழில் நடைபெற்று வருகின்றது. 31-3-1977 ஆம் நாளிலுள்ளபடி மாநில அளவில் மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவு கூட்டமைப்பு ஒன்றும், மாவட்ட அளவில் பனைவெல்ல மாவட்டக் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் எட்டும் பனைவெல்ல தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 958-ம் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வந்தன.

31-12-1977-ஆம் நாள் நிலவரப்படி இத்தொழிலில் உற்பத்தி செய்த பொருட்களின் மதிப்பும், விற்பனை செய்த பொருட்களின் மதிப்பும் முறையே ரூ. 293.33 இலட்சமும், ரூ. 306.58 இலட்சமும் ஆகும். 2,20,000 தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஈட்டிய ஊதியம் ரூ. 96.80 இலட்சமாகும். உற்பத்திச் செலவில் பெரும்பகுதி பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகின்றது.

**மேலைநாடுகளுக்குச் செல்லும் மேலான பொருள்கள்!**


உழைப்பையே நோக்கமாகக் கொண்ட இத்தொழில் ஏராளமான பேருக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களுக்கு ஊதியம் அளித்து வருகிறது. 1978-79ஆம் ஆண்டில் இத்துறையில் உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் முறையே ரூ. 960 இலட்சங்கள், ரூ. 1050 இலட்சங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1978-79-ல் இத்திட்டங்களின் மூலம் சுமார் 2,30,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பனைநார், பனையோலைத் தொப்பிகள், கழிவுத் தாள் கூடைகள், புருசுகள், பொருள்களைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் கூடைகள் போன்ற பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இத்தொழில்கள் அந்நியச் செலாவணியை ஈட்டி வருகின்றன.


**'பாம்கோலா", 'பாம் ஆரஞ்சு'**


தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லக் கூட்டமைப்பு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வழிகாட்டு முறையின் கீழ் உள்ளது. இந்தக் கூட்டமைப்பு ''பாம் கோலா'', ''பாம் ஆரஞ்சு என்கின்ற பானங்களைத் தயாரித்து, அவற்றைக் குறிப்பிட்ட அளவில் விற்பனையும் செய்கின்றது.

பனஞ் சர்க்கரையிலிருந்து ''பாம் கோலா'' பானம் தயாரிக்கப்படுகிறது. எனவே, இந்தப் பானத்தின் உற்பத்தி அதிகரித்தால், அதன் மூலம் மறைமுகமாக அதிக அளவில் பனை வெல்லத்தைப் பயன்படுத்துகின்ற வேலை வாய்ப்புகள் பெருகும்; இதனால் பனைமரத்திலிருந்து பதநீரை இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அதனைச் சார்ந்த மற்ற தொழிலாளர்களுக்கும், ஆதரவு கிடைக்கும். இதைத் தவிர, பனை வெல்ல உற்பத்தியாலும், பானம் தயாரிப்பிலும் அதனைப் புட்டியில் அடைக்




வாழ்க்கையில் மலர்ச்சி!
வழங்குவது
தமிழ்நாடு பரிசுச் சீட்டு.
தமிழ் புத்தாண்டு
சிறப்புக் குலுக்கல்!
Rs. 5,00,000
தமிழ்நாடு பரிசுச்
சீட்டு வாங்கிடுவீர்
சிறப்பு முதல் பரிசுகள் இரண்டு
ஒவ்வொன்றும் ரூ. 5 லட்சம் வீதம்
சிறப்பு இரண்டாவது பரிசுகள் மூன்று
ஒவ்வொன்றும் ரூ. 1,00,000 வீதம்
முதல் பரிசுகள் வரிசைக்கு இரண்டு
ஒவ்வொன்றும் ரூ. 50,000 வீதம்.
மற்றும் ஏராளமான பரிசுகள்.
குலுக்கல் நாள்: 20-4-1978
சீட்டின் விலை ரூ. 1/- மட்டுமே.
மொத்தப் பரிசுத் தொகை ரூ. 41 லட்சம்
10 வரிசைகள்—மொத்தப் பரிசுகள் 13,075
வெளியீடு:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
சென்னை-600 002





கும் தொழிலிலும் கூடுதலான வேலைவாய்ப்புகள் உருவாகும்.

சென்னையில், ஒரு வேலை முறை நேரத்தில் ( Shift ) 3,500 புட்டிகளில் பானத்தை அடைக்கும் திறனுடைய தொழிற்சாலை யொன்றை நிறுவத் திட்டமிடப் பட்டுள்ளது. மேலும், கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு விரும்பியவாறு டில்லியில் இதே போன்று இன்னொரு தொழிற் சாலை நிறுவப்படும்.

**கிராம, குடிசைத்தொழில் துறையினருக்கு....**

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்மையால் பொருளாதார நிலையில் நலிவுற்றவர்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன், கூடுதலாக 43 இனங்களைக் குடிசை கிராமத் தொழில் துறையினருக்கென ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிவுரை செய்தது. சிறு தொழில்கள், குடிசை, கிராமத் தொழில்துறையினர் உற்பத்தி செய்வதற்கென்று, 504 நுகர்வோர் பொருட்கள் ஒதுக்கப் படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. கதர் கிராமத் தொழில் வளர்ச்சிக்கும் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் உயர்வுக்கும் இது வழி வகுக்கும்.

**பழங்குடியினர் முன்னேற்ற மும்முரத் திட்டம் :**

பழங்குடியினர் பகுதிகளை தீவிரமாக மேம்படுத்தும் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் படி 9 மலைப் பகுதிகளில் ஒவ்வொரு பழங்குடியினருக்கும் 10 தேன் கூடுகள் என்ற வீதத்தில் 400 பழங்குடியினருக்கு 4,000 தேன் கூடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதியில் 100 விழுக்காடு உதவித் தொகை என்ற முறையில் தேன் கூடுகள் வழங்கப்படும். மற்ற பகுதிகளில் இந்த உதவித்தொகை 50 விழுக்காடு அளவுக்கு வரையறுக்கப் படும்.

இத்திட்டத்திற்காக அரசு 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 1.75 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. ஜவ்வாது, கல்ராயன், சித்தேரி மலைப் பகுதிகளில் உள்ள 340 பழங்குடியினருக்கு 1,700 தேன் கூடுகள் வழங்கிய வகையில் வாரியத்திற்கு 1976-77ஆம் ஆண்டில் ரூ. 77,900 செலவு ஏற்பட்டது. 1977-78ல் இந்தத் தொகையையும் அரசு ஏற்றுக் கொள்ளும்.

ஜவ்வாது மலையில் ரூ. 45,000 செலவில் தேனி இல்லம் அமைப்பதற்காகவும், 20 இளநிலை தேனீ வளர்ப்பு களப்பணியாளர்களைக் கொண்ட மேற்பார்வைப் பணியாளர் செலவுக்காக ரூ. 89,000 தொகைக்கும், அரசு 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 1.34 இலட்சம் மானியத்தை ஒதுக்கியுள்ளது.

**மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம் :**

மலைப் பகுதி முன்னேற்றத் திட்டத்தின்கீழ் 1975-76ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் கீழ் ரூ. 7 இலட்சத்தை (50 விழுக்காடு மானியமாகவும், 50 விழுக்காடு கடனாகவும்) வாரியம் பெற்றுக் கொண்டது.

இத்திட்டத்தின்கீழ் நீலகிரி பகுதியில் மக்களுக்கு அதிக வருமானம் அளிக்கத் தேன்கூடுகள் விநியோகம், யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான வடிப்பு இயந்திரங்கள் வழங்குதல் ஆகிய பொருட்கள் ஏற்கெனவே வாரியம் வழங்கியுள்ளது.

1977-78ஆம் ஆண்டில் பழங்குடியினர், சிறு விவசாயிகள் போன்ற 100 பேர்கட்கு 1,000 தேன் கூடுகளையும், 50 யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான இயந்திரங்களையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 1977-78-ல் ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 2.05 இலட்சம் செலவில் 1,500 தேன்கூடுகளையும், 55 யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான இயந்திரங்களையும் வழங்க வாரியம் உத்தேசித்துள்ளது.

**வறட்சி நிவாரணத் திட்டம் :**

திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 5.57 இலட்சம் (ரூ 1.27 இலட்சம் மானியம், ரூ. 4.30 இலட்சம் கடன்) 1976-77ல் அரசு உதவி அளித்தது. இவை 1977-78ல் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வறட்சி நிவாரணப் பணிக்கென 1977-78ஆம் ஆண்டில் மாநில அரசு மேலும் முறையே ரூ. 4.24 இலட்சம், ரூ. 9.58 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த உதவி பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நிதி உதவி அளிக்கவும், பனை ஓலை முடையும் நிலையங்கள் நிறுவுவதற்கும், 5 இலட்சம் பனை விதைகளை நடவும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**புயல் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் :**

அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் சொத்துக்கும், உயிருக்கும் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தாலும் புயலாலும் சேதமடைந்த கட்டடங்களைப் புதுப்பித்துக் கட்டவும், கருவிகளையும் சாதனங்களையும் பழுது பார்க்கவும் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்திற்கு ரூ. 9.09 இலட்சம் மானியமாகவும், ரூ. 0.65 இலட்சம் கடனாகவும் அரசு அனுமதித்துள்ளது. வாரியத்தின் அதிகார வரம்பின் கீழ் வரும் பல்வேறு வகை கைவினைஞர்களுக்கு உதவியும் அளித்துள்ளது. வாரியத்தின் அதிகார வரம்பின்கீழ் சுமார் 2,800 பேர் இந்த நிவாரணத் திட்டத்தினால் பயனடைந்தனர்.

**திக்கற்ற விதவைகள் மறுவாழ்வுத் திட்டம் :**

இவ்வாண்டில் விதவைகள் மறுவாழ்வுக்கென, ரூ. 2.79 இலட்சம் வாரியத்திற்கு அரசு மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 279 திக்கற்ற விதவைகளை கிராமப் பஞ்சாலை நிலையங்களில் வாரியம் சேர்த்துள்ளது. இவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மதிப்புள்ள 6 கதிர் கொண்ட புதுமாதிரி இராட்டைகள், கருவிகள் ஆகியவற்றை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம், கிராமப் பொருளாதாரத்தை வளர்த்திடும் வகையில் பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது. அதோடு, தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் கலைத் திறமையினை மேலைநாட்டினர் அறிந்து கொள்ளவும் வழிகோலுகிறது. தரமான பொருள்களை நியாயமான விலைகளில் வழங்கி வரும் இவ்வாரியம், எல்லாருக்கும் எல்லாம் கிடைத்திட நாளும் நற்பணியாற்றி வருகின்றது என்றால் அது மிகையல்ல!

## கிராமப்புறப் பகுதிகளின் மாணவ, மாணவியருக்கான தேசியப் படிப்புதவிகள் இரண்டு மடங்காகும்!

கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வரும் திறமை மிக்க மாணவ, மாணவியர்களுக்கு இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் வழங்கப்படும் படிப்புதவிகளை இரண்டிலிருந்து நான்காக வரும் கல்வியாண்டு 1978-79 முதல் உயர்த்தி தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி இப்போதுள்ள புதிய படிப்புதவிகளின் எண்ணிக்கை 748 என்பது1496 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தேசிய படிப்புதவிகள் திட்டம் இந்திய அரசினரால் ஏற்படுத்தப்பட்டு, இந்திய அரசின் பண உதவியுடன் தமிழ்நாட்டில் 1971-72 முதல் செயல் பட்டு வருகிறது. கிராமப்புறப் பகுதிகளில் உள்ள திறமை மிக்க மாணவ, மாணவியர்கள் கல்வியில் மேலும் சிறந்து விளங்கி அவர்களது திறமையை வெளிப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்க மாகும். இப்படிப்புதவி இப்போது 9-ஆம் வகுப்பில் தொடங்கி 11-ஆம் வகுப்புவரை வழங்கப்படுகிறது. கிராமங்களில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பள்ளிகளில் 8-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் பள்ளியில் முதல் நான்கு தகுதிகளில் தேர்ச்சிபெறும் மாணவ, மாணவியர்கள் முதனிலை யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மே மாதத்தில் படிப்புதவிக்காக ஒவ்வொரு வட்டத்திலும் மாவட்டக் கல்வி அலுவலர்களால் நடத்தப்படும் இறுதி நிலைத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுகின்றனர். இத்தேர்வில் ஊராட்சி ஒன்றிய அளவில் முதல் நான்கு தகுதி பெறும் 1496 மாணவ, மாணவியர்களுக்கு இனி புதிய படிப்புதவிகள் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் விடுதிகளில் தங்கிப் படிப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 1000/-மும் மற்றவர்களுக்கு ரூ. 500/-ம் தேர்ந்தெடுக்கப்படாத பள்ளிகளில் படிப் பவர்களுக்கு ரூ. 150/-ம் படிப்புதவியாக வழங்கப் படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 296 பள்ளிகள் தமிழ்நாடு முழுவதிலும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.


# சென்டெக்ஸ்

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்

* படுக்கை விரிப்புகள்
* தலையணை உறைகள், மேஜை விரிப்புகள்
* டெர்ரி டவல்கள்
* சீர் சுக்கர்
* பர்னிஷிங்ஸ்
* டவல்கள் & கேஸ்மெண்ட்கிளாத்

எங்கள் பிரத்யேக "ஷோ" ரூம்களுக்கு விஜயம் செய்யுங்கள்.

**உம்மிடியார் – அங்காடி மையம் (ஏர்கண்டிஷண்ட்)**

L.I.C. எதிரில்,
162, அண்ணாசாலை, சென்னை-600002.
&
9 & 10, யூனிடி பில்டிங், தாஜ்மஹால் ஹோட்டல் எதிரில், அபிட்ஸ், ஹைதராபாத்-500001.

**சென்னிமலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்**

சென்னிமலை, தமிழ்நாடு.

M. P. நாச்சிமுத்து, பி.ஏ.,பி.எல். தலைவர்

# தமிழர் ஆடை

—டாக்டர் திருமதி தே. தியாகராசன்



மனிதன் நாகரிகத்திற்கு அடையாளமாக இருப்பது ஆடை. தன்னைக் காத்தற்கு அவனுக்கு ஆடை உதவிற்று. தன்மானத்தைக் காத்தற்கும் அவன் தன் உடலை மூடிக் கொண்டான் என்பர். பறவையைப் பார்த்து மரத்திலும், விலங்கைப் பார்த்துக் குகையிலும் வாழக் கற்றுக் கொண்டவனும் உண்டு. வேட்டையாடிய விலங்கை அப்படியே உண்டும் சுட்டுச் சமைத்து உண்டும் வாழ்ந்தான். விலங்கின் தோலுரித்த அவன் அதை நாமும் அணிந்தால் என்ன என்று பயன் கருதியும் அதன் அழகிலீடுபட்டும் உடுத்தியிருக்கலாம். அல்லது தோலைப் படுக்கைமீது பயன்படுத்திய அவன், தோலை விரித்துப் படுக்கையாகவே பயன்படுத்திய அவன், அதன் குளிர் போக்கும் தன்மை கண்டு அதைத் தனக்குக் கொடையாகக் கொண்டிருக்கலாம். அல்லது தோலை ஆடையாகக் கொண்டபின் மேற்கூறியவற்றிற்குத் தோலைப் பயன்படுத்தியிருக்கலாம்.

ஆனால், தோலாடை கட்டுமுன் அவன் எதையணிந்தான்? பறவை, விலங்கு இவற்றைப் பிடித்து உண்ணுமுன் எதிர்ப்பின்றிப் பெறக் கூடிய காய்கறிகளைத் தின்றான். அவ்வாறே விலங்கினின்று தோலாடை பெறுமுன் இலையாடை பெற்றான். அடை என்றால் இலை. இலைகள் ஒன்றற்கொன்று அடுத்திருப்பதால் இலை அடையெனப்பட்டிருக்கலாம். இவன் அந்த அடையைத் தைத்து உடுத்தினான். அது ஆடையாயிற்று. மேலும் உடலை அடுத்து இருந்த அடை, பின் ஆடையாயிற்று.

அடையாம் இலைகளைத் தைத்து அவன் ஆடையாக அணிந்ததை நாமறிவோம். ஏதென் தோட்டத்திலிருந்த ஆதிமக்கள் ஆதாமும் ஏவாளும் தங்களை உண்ண வேண்டாம் என்று கடவுள் தடுத்த மரத்தின் கனியை உண்டு, தாங்கள் ஆடையின்றி இருத்தலைத் தெரிந்து கொண்டு, தங்கள் அற்றம் மறைக்க அத்தியிலையால் ஆடைகளைச் செய்து உடுத்தினர்.

அடையால் ஆனது ஆடையாவது போல் உடலோடு ஒட்டியது உடையாகிறது. உடுக்கை என்பதும் அதே பொருளையுடையது. ''உடையென்னும் சொல் பயன்படுத்தப்படும் தொடர்பு அது தேகத்தை நெருங்கி அணியப்படுவது என்பதைக் காட்டுவது போல் தோன்றுகிறது. ஆனால், ஆடையென்றால், தோற்றத்திற்காக ஆடையணியப்படுவது என்ற பொருளைத் தருவதுபோல் இருக்கிறது'' என்றார் டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள். எனவே, ஆடையும் உடையும் ஒரே பொருளை உடையனவல்ல.

இலை தழையாலான ஆடை தழையாடை எனப்பட்டது. இது, இதிகாச காலத்திலேயே பெண்டிர் ஆடையாக இருந்தது போலும்! தொழுநையாற்றில் நீராடிய மகளிர் ஆடையைக் கவர்ந்த கண்ணன் அப்பெண்கள் தழையை உடுத்திக் கொள்ளக் குருந்தமரம் வளைந்திட மிதித்தான். அவர்கட்குத் தழை நல்கி உதவினான். சங்ககாலப் பெண்டிர் தழையும் மலரும் சேர்ந்து ஆன தழையுடையணிந்தனர். கொற்கையில் பழையர் மகளிர் தழையுடை யணிந்தனர். மகளிர் தண்தழை முறித்தழை பல்குழைத் தொடலை முதலியன உடுத்தார்.

வயலைக் கொடியாலும் நொச்சி என்னும் நெருப்பொத்த செயலையாலும் அதைச் செய்தனர். நெய்தல் மாமலர்ப் பெருந்தண் மாத்தழை மகளிர் பலரும் வாழ்ந்தனர். இலையும் மலருங் கலந்து தழையுடை செய்தனர். கழுநீரும் ஆம்பலும் கலந்தனர். வயலைக் கொடியும் ஆம்பலும் கூட்டினர். விழாக் காலத்து நெய்தல் மலரால் தழையுடை செய்தனர்.

களவுத் தலைவன் கையுறையாகத் தலைவிக்குத் தாரும் தருவான், தழையுந் தருவான். தலைவனை இழந்தபின் தழையுடை அணியார் போலும்!

தழையுடை பருத்தி, பட்டு முதலிய நெசவுத் துணி வந்த பின்னரும் அணியப்பட்டது. ஏனென்றால், சங்க காலத்தில் நெய்த துணிகளையும் ஆடைகளையும் தழை யாடையையும் அணிந்ததை அறிகிறோம். துணியாடை மீதும் தழையாடை அணிந்திருக்கலாம். தழையாடை தொடர்ந்து அணியப்பட்டுக் கொச்சியைச் சேர்ந்த காடர்களால் இற்றைக்கு இரண்டு மூன்று தலைமுறைக்கு முன்னால் வரை பயன்படுத்தப்பட்டது.

மரங்களிலிருந்து இலை, மலர்களால் தழையாடை வந்தது போல், மரப்பட்டைகளும், நாரும் பயன்பட்டு மரவுரியாயிற்று. இது துறவிகட்கும் ஆடையாயிற்று. வற்கலை எனும் பெயர் பெற்றது. சீரை எனப்பட்டது; மான் தோலும் ஆடையாயிற்று.

பருத்தியின் பயனறிந்த மனிதன் அதனின்றும் நூற்றுத் துணி நெய்தான். நீட்டமாக நெய்து, அறுத்து அணிந்தான். அவ்வாறு துணித்த துண்டு துணியாகவும், வெட்டியது வேட்டியாகவும்,

அறுத்தது அறுவையாகவும் பயன்பட்டன.

மிலேச்சர் தோளில் அறுவை இருந்தது. வேலன் தலையிலிருந்ததும் அதுவே. பூத்தொழில் நிரம்பிய பாம்பின் தோலன்ன அறுவையைப் பொருநர் பெற்றனர். மணமூட்டிய அறுவை படுக்கையில் விரிக்கப் பெற்றது. தூய வெள்ளறுவையை அவர்களறிவார். அதைப் பிணமூடப் பயன்படுத்தியதுமுண்டு. புலைத்தி அதற்குக் கஞ்சி யூட்டினள். பூந்துகிலுக்குங் கஞ்சியூட்டினள். சில வேளை ஆடையினின்றும் கஞ்சி நீக்கினள்.

சிறுபாணன் பெற்ற அறுவை மூங்கிலாடைபோன்று மெல்லிதாயிருந்தது. இவ்வறுவையை விற்போர் அறுவையர் எனவும் அவர்கள் விற்ற வீதி அறுவை வீதி எனவும் வழங்கலாயிற்று. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்றொரு புலவருமிருந்தார்

கலிங்க நாட்டிலிருந்து வந்த பருத்தி ஆடைகளுக்குத் தமிழர் கலிங்கம் என்று பெயரிட்டனர். கலிங்க நாட்டிலிருந்து வந்த பட்டு ஆடையைத் தமிழர் 'நூலாக் கலிங்கம்' என்று கூறினர். மணப்பெண் கோடிக் கலிங்கமணிந்தாள். முருங்காக் கலிங்கமணிந்த மணமகளும் உண்டு வதுவை நாட்கலிங்கத்துள் அவளிருப்பாள். சில மகளிர் சில் பூங்கலிங்க மணிந்தனர். சமைக்கும் போது தயிர் பட்ட கையைத் தன் கலிங்கத்தில் துடைத்துக் கொண்டு மேலே சமைத்தாளொருத்தி.

நுரை போன்ற கலிங்கம், நுரை போல விரிந்த நுண்பூங் கலிங்கம் இவற்றை மக்கள் உடுத்தினர் மூங்கிலின் உட்புறத்தேயுள்ள வெள்ளிய தோல்போலக் கொய்யப்பட்டுள்ள இழைகளின் வரிசை கண்ணுக்குப் புலப்படாத ஒண் பூங் கலிங்கமும் அறிவர். நுட்பமான நூலையுடைய கலிங்கம் அணிந்தனர். பகன்றை அகன்று மடி கலிங்கம் கட்டினர். பாம்புரி போன்ற வெண்மையான பூத்தொழிலையுடைக் கலிங்கமும் அறிவர். அரையில் அணியப்பட்டது கலிங்கம். பாலாவி போன்று விளங்குகின்ற கலிங்கத்தைப் பாணர் உடுக்கச் செய்தனர் மன்னர்.

ஆடைகளில்தான் எத்தனை வகைகளைப் பண்டைத் தமிழரறிவார்! பாதிரிப் பூப்போன்ற கோசிகம்எனும்பட்டாடை, வங்க தேசத்திலிருந்து வந்த சாதரென்னுமுடை, கோங்கமலர் போன்ற நல்ல நிறமுடைய கலிங்கம், பட்டாடை, நீலவாடை, சிவந்த ஆடை, வெள்ளை ஆடை




பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா:

## கவிதைப் போட்டி, ஓவியப்போட்டி

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழாவினை ஏப்ரல் 29, 30 ஆகிய இரு நாட்களிலும் மிகச் சிறப்பான முறையில் நடத்த அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

அதனை ஒட்டி, கவிதைப் போட்டி ஒன்றும், ஓவியப் போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்துள்ளது.

சிறந்த கவிதைகளாகத் தேர்ந்தெடுக்கப்பெறும் மூன்று கவிதைகளுக்கும், மூன்று சிறந்த ஓவியங்களுக்கும் ஏப்ரல் 30-ம் நாள் சென்னையில் நிகழவிருக்கும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

### கவிதைப் போட்டி:

கவிதைப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கவிஞர்கள் ''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்'' என்ற தலைப்பில், 48 வரிகளுக்கு மிகாமல் கவிதை இலக்கண மரபுக்குட்பட்ட வகையில், தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதி ஏப்ரல் மாதம் 17-ஆம் நாளுக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டு கொள்ளப் படுகிறார்கள். கவிஞர்கள் தங்கள் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெளிவாகத் தனித்தாளில் எழுதிக் கவிதையுடன் இணைத்து அனுப்ப வேண்டும். கவிதையை அனுப்பி வைக்கும் அஞ்சல் உறையின் தலைப்பில் ''பாவேந்தர் பாரதிதாசன் விழா கவிதைப் போட்டி'' என்று குறிப்பிட வேண்டும்.

### ஓவியப் போட்டி :

ஓவியப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் ஓவியர்கள் பாரதிதாசன் எழுதிய ''அழகின் சிரிப்பு'' என்ற கவிதை நூலிலுள்ள சில வரிகளின் விளக்கமாக வண்ண ஓவியம் 3 அடி X 2 அடி அளவில் வாட்டர் கலரிலோ, போஸ்டா கலரிலோ, தீட்டப்பட்டு ஏப்ரல் 20-ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஓவியர்கள் தங்கள் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெளிவாகத் தனித் தாளில் எழுதி ஓவியத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். ஓவியத்தை அனுப்பிவைக்கும் அஞ்சல் உறையின் தலைப்பில் ''பாவேந்தர் பாரதிதாசன் விழா ஓவியப்போட்டி'' என்று குறிப்பிடவேண்டும்.

கவிதைகள், ஓவியங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

இயக்குநர்,

**செய்தி, மக்கள் தொடர்புத்துறை,**

''தமிழரசு அலுவலகம்''
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

இன்னும் பருத்தி நூல், பட்டு நூல், நாரால் நெய்யப்பட்ட ஆடைகளை அணிந்தனர். நீல வாடை காழகம் எனப் பெயர் பெற்றது.

இன்னும் பட்டு நூலாலும் எலிமயிரானும், பருத்தி நூலானும் நுண்ணிய தொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச் சாலியர் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்தனர். இவற்ருலான புடைவைகளைக் கொண்ட கடைகள் நிறைய மதுரையிலும் இருந்தன.

இடையைச் சுற்றிக் கட்டும் ஆடை இடையல் எனப்பட்டது. வேதகம் என்பது நுண்ணூலாலாகிய துணி. பாம்பின்தோல் போன்ற ஆடை நாகம் என்றே பெயர் பெற்றது.

நோக்கு நுழைகல்லா
நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன அறுவை

அவ்வகையைச் சார்ந்ததே - பாரி என்பதும்நல்லாடையின் பெயரே. அருச்சுனன் அணிந்த பூவிரி கச்சையும் பூத்தொழில் நிரம்பிய நல்லாடையாகும்.

ஆடை வகைகள் இவ்வாறிருக்க, மகளிர் அணிந்த ஆடையை அவர்கள் எவ்வளவு நேர்த்தியாய் அணிந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள. ஆடையிலே அசைகின்ற நீண்ட கொய்சகத்தையுடைய மகளிர் தூசுலா நெடுந்தோகையினல்லவர் இருந்தனர். தோகை என்ற சொல் முன்ருனே, ஆடை, கொய்சகம் என்ற பொருளிலெல்லாம் பயன்பட்டது. கொய்சகம் நீவி எனவும் பெயர் பெற்றது. மகளிர் ஆடையுடுத்தும்போது இடையிலிடும் முடிச்சையும் அது குறித்தது.

மேலும் சில சிறப்புடைகளை நாம் காணலாம். வம்பு என்ற ஆடைவகை வம்புடையொள்வாண் மறவர் எனுங்கால் ஆடவர் அணியும் அரைக் கச்சைக் குறிக்கும். வம்பு என்பது மகளிர் அணியும் மார்புக் கச்சைக் குறிக்கும். வம்புடைக் கண்ணுருத்தெழுதருமுலை எனுமிடத்துப் பெண்ணின் மார்புக் கச்செனப் பொருள்படும். வார் என்பதும் இதே பொருளுடைத்து. பெண்டிர் வாரடங்கு வனமுலையார் ஆவர். 'வாரொன்று மென்முலையர்' என்ற கூற்று இதை விளக்கும். இன்னும் நோக்கினுல் விசிகை என்பதும் மார்புக் கச்சே. வட்டுடை என்பது முழந்தாளளவு அணியும் உடை. 'அந்நுண் மருங்கு லிகந்த வட்டுடை' பற்றி நாமறிவோம்.

கஞ்சுகி, காஞ்சுகம், கஞ்சுகம், வாரணம் என்பன சட்டையின் பெயர். மெய்ப்பை என்பது சட்டையின் பெயர்களுளொன்று, 'மெய்ப்பை புக்க வெருவரு தோற்றத்து' ஆடவர்களிருந்தனர். குப்பாயமும் சட்டையைக் குறிக்கும் 'குப்பாய மிலேச்சன்' என்று காண்கிறோம். உடையைக் குறிக்கக் கேரளத்தில் இச்சொல் இன்றுமுண்டு.

படம் புக்கு' 'படம் புகு மிலேச்சர்' எனும்போது படம் என்பது சட்டை எனப் பொருள்படுகிறது.

## நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை !

கைத்தறிதான் நாட்டின் மிகப் பெரிய குடிசைத் தொழில்.

நாட்டின் மொத்தப் பருத்தித் துணி உற்பத்தியில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கைக் கைத்தறிகள் உற்பத்தி செய்கின்றன.

விவசாயத்திற்கு அடுத்த படியாக ஏராளமானவருக்கு கைத்தறித் துறைதான் அதிக வேலைவாய்ப்பு அளிக்கிறது (60ல் ஒருவர் கைத்தறித் துறையில் உள்ளார்).

ஏறத்தாழ இந்தியாவின் அனைத்து கிராமங்களிலுமே கைத்தறி உள்ளது.

அதில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பாலானோர் பெண்கள்.

1976-77-ல் இந்தியா ஏற்றுமதி செய்த பருத்தி ஆடைகளில் மூன்றில் ஒரு பங்கு கைத்தறித் துணியே!

கிட்டத்தட்ட எல்லாப் பட்டு ஆடைகளுமே கைத்தறியில் தான் தயாராகின்றன.

இவற்றைத் தைக்கத் தையற்காரராம் துன்னகாரர் இருந்தனர்.

புடைவை என்பது ஆண்பாலாருடைக்கும் பெயராய்ப் பண்டு விளங்கிற்று. இவ்வழக்கு இக்காலத்தில் செட்டி நாட்டில் உள்ளதென்பர். இப்போதும் கூடக் கேரளப் பகுதியில் சீலை என்ற சொல் மகளிர் உடைக்கு ஆவதுபோல் ஆடவர் உடைக்கும் ஆகிறது.

ஆடை ஒருவர்க்குச் சமுதாயப் படிநிலையை உயர்த்தும், மேலாடை இன்றிச் சபை புகுந்தால் சுற்ருருங்கூட அவரை மதிக்கமாட்டார். திருப்பாற்கடல் கூடப் பீதாம்பரத்தைத் திருமால் அணிந்திருந்ததால் அவருக்குத் திருமகளைத் தந்தது; அதே வேளை தோலாடை கட்டியிருந்ததால் அரனுக்கு ஆலகால நஞ்சைத் தந்தது என்னும் நகைச்சுவைப் பாடலொன்றுளது. ஆடைகளின் அடிப்படையில் அரனுர் காலத்தால் முந்தியவர். நெசவு, வந்தபின், பொன்னுடை அணிந்த மாலானவர் பிந்தியவர்.

சங்ககால ஆடவர், மகளிர் மார்பிலும் அரையிலும் ஆடை அணிந்திருந்ததைக் கண்டோம். இடைக் காலத்திலும் மகளிர் கச்சணிந்தனர். ஆடவர் மேலாடை அணிந்தனர். சான்று 'மேலாடை வீழ்ந்த தெடுவென்ருன்' என்று நளவெண்பாவில் பார்க்கிறோம்.

தற்காலத்தை எடுத்தால் கடந்த நூற்ருண்டில் சமூகத்தில் உயர்ந்தோர் மார்பை மூடினர். பிறருக்கு அவ்வுரிமையில்லை. இதற்குச் சான்றுகளை நாம் விரிக்க இடமிங்கில்லை.

இதிகாச காலத்தில் அடிமைகட்கு மேலாடை அணியும் உரிமையில்லைபோலும்! இதைப் பாஞ்சாலி சபதத்தில் காண்கிறோம். 'மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கங் கீழடியார்க்கில்லை.....பாண்டவர் மார்பிலேந்தும் சீரையுங் களைவாய், தையல் சேலையுங் களைவாய்' என்ருன் கர்ணன். பாண்டவர் ஆடவர்; அச்சமின்றி ஆடையைக் களைந்தனர். பாஞ்சாலி, 'எவ்வகை யுய்வோம்' என்று தியங்கிக் கண்ணனருளால் மானம் பிழைத்தாள்.

இவ்வாறு இதிகாச காலந்தொட்டு இந்நாள்வரை ஆடையணிந்திருத்தல் நம்நாட்டுப் பண்பாகிறது.

(வ. சுப்பையா பிள்ளை பவளவிழா மலரிலிருந்து).



# கவின்மிகு காஞ்சிப்பட்டு!

மாம்பழம் என்றதும், சேலம் நம் நினைவுக்கு வருகிறது!

பலாப்பழம் என்றதும், பண்ணுருட்டி நம் கண்முன் காட்சி தருகிறது!

பித்தளைப் பாத்திரம் என்றதும், கும்பகோணம் மனத்தில் நிழலாடுகிறது!

ஆனால், பட்டு என்றதும் 'பட்' டென்று நம் நினைவுக்கு வருவது காஞ்சிபுரம்தான்!

பழம் பெருமை மிக்க காஞ்சி, பட்டுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. காஞ்சிப் பட்டு என்றாலே, அதற்குத் தனிப் பெருமை, சிறப்பு இருக்கிறது. அதன் புகழ் பட்டொளி வீசிப் பறக்கின்றது. அதற்குக் காரணம் என்ன?

பொதுவாகப் பெண்கள் அணியும் ஆடை வகைகளில் பட்டுப் புடவைகளுக்குத் தனி மகத்துவம் உண்டு. விசேடக் காலங்களிலும், திருமண விழாக்களிலும் பல வண்ணப் பட்டுப் புடவைகள் பெருமளவில் விற்பனையாவதைப் பார்க்கிறோம்.

பட்டுப் புடவை கட்டிக் கொள்வதைப் பெருமையாக நினைக்கின்றனர் பெண்கள். ஏன், ஒரு பட்டுப் புடவையாவது கைவசம் வைத்திருந்தால்தான் அவர்களுக்கு மன நிறைவே ஏற்படுகிறது! பெரும்பாலோர் திருமணத்துக்குப் பட்டுப் புடவை எடுக்க காஞ்சிபுரத்துக்கே படையெடுப்பதை நாம் பார்க்கிறோம். அப்போதுதான் அவர்களுக்குக் காசு போட்டாலும் கண்ணுக்கு அழகாய் இருக்கிறதே என்ற திருப்தி ஏற்படுகிறது!

ஜரிகையில் அண்ணா



அந்தக் காலத்துப் பட்டுப் புடவைக்கும், இந்தக் காலத்துப் பட்டுப் புடவைக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. இன்று காலத்துக்கு ஏற்ற வகையில் கண்ணைக் கவரும் பல வண்ணங்களில், பல்வேறு வடிவமைப்புகளில் பாங்கான பட்டுப் புடவைகள் தயாரிக்கப்படுகின்றன.


தமிழகத்து நெசவாளர்களின் நேர்த்தியான கைவேலைப்பாட்டினை மேலைநாட்டினரே பாராட்டுகின்றனர் என்றால், நமக்கு எவ்வளவு பெருமையாக இருக்கின்றது!

பாட்டாளிகளால் உருவாக்கப்படும் இந்தப் பட்டுப் புடவைகள் எல்லாம் தமிழ்நாட்டில், ஆரணி, கும்பகோணம், தாராசுரம், சேலம், திருப்புவனம் ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்போது பரமக்குடியிலும் பட்டு உற்பத்தியாகின்றது.

காஞ்சியில் தயாராகும் பட்டின் தனித் தன்மைகள் என்ன?

இதற்குக் 'கோ-ஆப்டெக்ஸ்' உற்பத்தி வளர்ச்சி மேலாளர் **திரு. டி. கே. பூபாலன், பி.எஸ்சி., (டெக்ஸ்); அவர்கள்** கூறுகிறார் :

'' காஞ்சியில் தயாராகும் பட்டுப் புடவைகள் இரட்டை இழைப் பாவு ஊடையில் நெய்யப்படுகின்றன. இந்த இரட்டை இழைப் பாவு ஊடை காஞ்சி நெசவாளர்களுக்குக் கைவந்த கலையாகும். பரம்பரை பரம்பரையாக அவர்கள் தம் முன்னோர்களிடமிருந்து கற்றுக் கொண்ட இத் தொழிலில், அவர்கள் தனித் தன்மை பெற்று விளங்குகிறார்கள். இதுவும் காஞ்சிப் பட்டுப் பெருமைக்கு ஒரு காரணம்.



''காஞ்சியில் மட்டுமே இந்த இரட்டை இழைப் பாவு ஊடை யில் பட்டுப் புடவைகள் தயாரிக் கப்படுகின்றன. அதனுல் துணி யின் எடை கூடுதலாகிறது. துணி யின் எடை கூடக் கூட அதன் மதிப்பும் மேலும் மேலும் உயர் கிறது.''

பொதுவாக எடையைப் பொறுத்துதான், ஒரு பட்டுப் புடவையின் மதிப்பே நிர்ணயிக் கப்படுகிறது.

பருத்திக்கும், பட்டுக்கும் ஒரு வித்தியாசம். பருத்தி இழை குறையக் குறையத்தான் அதன் மதிப்பு உயர்கிறது. ஆனுல், பட்டின் இழை கூடக்கூடத்தான் அதன் மதிப்பு உயர்கிறது!

உதாரணமாக, 20ஆம் நெம் பர் கைத்தறித் துணியின் விலை மிகவும் குறைவு. அது ஒரு மீட் டர் ரூ. 4க்குக் கிடைக்கிறது. ஆனுல் 80, 100, 120ஆம் நெம்பர் கைத்தறித் துணியின் விலையோ இதை விட சற்றுக் கூடுதலாகி றது. அதாவது 80, 100 ஆம் நெம்பர் கைத்தறித் துணியின் விலை மீட்டர் ரூ. 8 அல்லது ரூ. 9க்கு விற்கப்படுகிறது.

காஞ்சிபுரம் பட்டு ரகத்தில் அரை அங்குலம் அல்லது முக்கால் அங்குலத்துக்குச் சரிகை இருந் தால், அதன் விலை ரூ. 350க்கு மேலேதான் இருக்கும்.

ஒரு காஞ்சிபுரம் பட்டுப்புடவை தயாரிக்க எத்தனை நாளாகும்? 10 அல்லது 15 நாட்களாகும்.

காஞ்சிபுரம் பட்டுப் புடவை யின் விலை ரூ. 360லிருந்து ரூ. 1,600, ரூ. 2,000 வரை உள்ளது. முழுக்க முழுக்க வெள்ளிச் சரிகை களால் பொன் மெருகு இடப் பட்ட பட்டுப் புடவையின் (Tissue) விலை ஆயிரம் ரூபாயா கும். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது போல, இந்தப் புடவை இருந்தாலும் ஆயிரம் ரூபாய், கிழிந்தாலும் ஆயிரம் ரூபாய் என்று சொல்லலாம் போலிருக்கிறது! ஆம். இந்தப் புடவை பழசாகிக் கிழிந்து போனுலும்கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. 40 சதவிகித மதிப்புக்கு அதிலுள்ள வெள்ளியே நமக்குக் கிடைக்கிறதே!

காஞ்சிப் பட்டுக்கு இன்னெரு தனித் தன்மை, அது 'கோர்வை' யில் தயாராவதாகும்.

உதாரணமாக, ஒரு புடவை யைப் பார்க்கிறேம். அதில் இரு பக்கமும் உள்ள 'பார்டர்கள்' ஒரு நிறமும், மையப் பகுதி முழுதும் ஒரு நிறமும் கொண்ட தாக இருக்கும். ஒரு தறியில் மூன்று பேர் உட்கார்ந்துகொண்டு பார்டரையும் சேர்த்து நெய் வதைத்தான் 'கோர்வை' என்கி றேம்.

இந்தப் புடவை தயாரான பிறகு பார்த்தால், 'பார்டர்' தனியாக நெய்து சேர்த்தது போலத் தென்படும். ஆனுல், அவை ஒரே சமயத்தில், இரு நிறங்கள் வருமாறு நெய்தவை அன்றே?

காஞ்சிப் பட்டு, நம்மவரை மட்டுமா கவர்கின்றன? ஸ்ரீலங்கா, மலேசியா ஆகிய நாட்டவரையும் வெகுவாகக் கவர்கின்றனவே!


இந்தப் பட்டுப் புடவை கெட் டிக்காரர்களால் தயாரிக்கப்பட்ட தல்லவா? அதனுல் இதன் சாயம் கெட்டியாகத்தானே இருக்கும்?

பட்டுப் புடவைக்குத் தேவை யான சரிகை, முன்பெல்லாம் சூரத்திலிருந்து தருவிக்கப்பட் டது. ஆனுல், இன்று தமிழக அரசு, 'தமிழ்நாடு சரிகை லிமி டெட்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைக் காஞ்சிபுரத்தி லேயே அமைத்துள்ளது. தற் போது இங்கு உற்பத்தியாகும் சரிகையே பயன்படுத்தப்படு கிறது.




வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சியில் பரம்பரை பரம்பரை யாக நெசவாளப் பெருங்குடி மக்கள் தறிகளையே நம்பி வாழ் கின்றனர். சுமார் 5,000 தறிகள் அங்குள்ளன. சுமார் 7,000 பேர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின் றனர். இவர்களது நல்வாழ்வுக் காகத் தமிழக அரசு பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது.

காஞ்சிப் பட்டு, கவர்ச்சிப் பட்டு என்பது மட்டுமல்ல, தர மான பட்டு, தனித் தன்மை பெற்ற பட்டு என்று சொல்வதில் பெருமைப்படலாம்.







# கூட்டுறவால் நெசவாளர் குடியெல்லாம் பிழைக்கும்!



கற்பனைகள் மி[illegible]ரிந்து கவிதைகளில் நிறையும்;
பற்பலவாம் நிறவகைகள் [illegible]டைக்கும்கைத் தறியும்!

கைத்திறனும் கலைநலனும் கவினுறவே [illegible]செய்வோம்;
வைத்தவிழி கவர்ந்திடவே வனப்புமிக நெய்வோ[illegible]!

பாவான நூல்மாறப் பதிந்திருகால் அழுத்தும்;
பூவான குறுக்கிழைகள் பொருந்தக்கை இழுக்கும்!

பாவின் இசை கருதுகிற பாவலனைப் போலே,
பாவின்சீர் பார்க்கக்கண் படரும்நூல் மேலே!

மின்போல்பெண் விழிவெட்டும் விரைவுதனைப் போன்றே;
விசைப்பெட்டி உட்புகுந்து மீண்டுவரும், நாடா!

இடுக்கண்ணும் இன்பமுமே இல்லறமாய் இருக்கும்;
நெடுக்கிழையும் குறுக்கிழையும் நெய்துதுணி பிறக்கும்!

கோழியுடன் குஞ்சுகளும் கூட்டுறவாய்த் திரியும்;
குடும்பத்தோர் எல்லாரும் கூடிப்பணி புரிவார்!

தறிகளிலே முதலீடு சிறிதளவு கொண்டே,
வறியோரும் வேலைபெற வாய்ப்புமிக உண்டே!

பொறிகளினை இயக்குவதில் அறிவுமிகத் தேடும்;
தறிகளிலே நெய்வதுவோ சிறியோர்க்கும் கூடும்!

நாட்டின்பேர் கைத்தறியில் நன்குயர்ந்து தழைக்கும்;
கூட்டுறவால் நெசவாளர் குடியெல்லாம் பிழைக்கும்!

மனசை ப.கீரன்



# அண்ணா எனும் இலக்கியவாதி

(5)

பி.சி.கணேசன்

இலக்கியத் துறையில் அண்ணா புரிந்த சாதனைகள் என்று பார்க்கும்போது இன்னின்ன துறையில் இப்படி இப்படிச் சாதனைகள் புரிந்தார் என்று திட்டவட்டமாக வரையறுத்துச் சொல்வதில் சில சிரமங்கள் உண்டு. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் அவரிடம் இருந்தன. இவற்றை ஒரு குறிக்கோளோடு —சமூக சீர்திருத்தத்தைச் செய்யவேண்டும் என்கிற ஆசையோடு — ஆரம்பத்திலிருந்தே அவர் கையாண்டார். ஒரு நாவல் ஆசிரியராக ஆக வேண்டும் என்றோ, நாடக ஆசிரியராக ஆக வேண்டும் என்றோ, கட்டுரை ஆசிரியராகத் திகழ வேண்டும் என்றோ, சிறு கதை எழுத்தாளராகச் சிறப்புப் பெற வேண்டும் என்றோ எண்ணி, அண்ணா தன்னுடைய பேனாவைப் பயன்படுத்தியது கிடையாது.

ஜாதிக் கொடுமை சமூகத்தை ஆட்டிப் படைக்கிறது. அதை மக்களுக்குத் தெளிவு படுத்தி அவர்களை விழிப்புக் கொள்ளச் செய்யவேண்டும் என்று எண்ணிய போது, ''சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்'' என்கிற அருமையான ஒரு நாடகத்தை எழுதினார். பணக்காரர்களின் பசிக்கு ஏழை மக்கள் பலியாகிப் போவதைப் படம் பிடித்துக் காட்ட அவர் எண்ணியபோது, ''ஓர் இரவு'' என்கிற நாடகம் உருப்பெற்றது. மிட்டா மிராசுகள் சமூக வாழ்க்கையில் எப்படிக் கொட்டம் அடித்தார்கள் என்பதைச் சித்திரிப்பதற்காக அவர் தீட்டிய நாடகம் ''வேலைக்காரி''. நவ நாகரிகம் என்கிற பெயரில் சமூகக் கேடுகள் எப்படி மலிந்து விடுகின்றன என்கிற விஷயத்தை ''பார்வதி பி.ஏ.'' என்கிற நாவலில் அவர் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டினார். மூட நம்பிக்கையின் முடை நாற்றம் வீசுகின்ற குடும்பங்கள் எப்படிச் சீரழிவுக்கு உள்ளாகின்றன என்பதை 'அருமையான பாத்திரப் படைப்பு மூலம் ''ரங்கோன் ராதா'' என்கிற நாவலில் அவர் எடுத்துக் காட்டி இருக்கிறார். ''குமரிக் கோட்டம்'', ''கலிங்க ராணி'' ஆகிய அவர் எழுதிய நெடுங் கதைகளிலிருந்து சிறு கதைகள் வரை, எல்லாமே சமூகப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்கிற உந்துதல் அவருக்கு ஏற்பட்ட போது, தேவையை ஒட்டி அவர் தேர்ந்து எடுத்துக் கொண்ட இலக்கிய வடிவங்களாகவே இருந்தன.

நாவல் எழுத வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு, அதற்கான கருப் பொருளை ஓர் இலக்கியவாதி தேடுவது இயற்கை. நாடக வடிவத்தில் ஒன்றைச் செய்ய வேண்டு மென்று முடிவுக்கு வந்து, அதற்கான அடிப்படையான விஷயத்தை இலக்கியவாதிகள் தேர்ந்து எடுத்துக் கொள்வது உண்டு. அண்ணா எனும் இலக்கியவாதி இதற்கு முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார். பிரச்சாரம் தான் அவருடைய நோக்கம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பிரச்சாரம் செய்ய எந்த வடிவத்தைத் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர் யோசிக்கின்றபோது, சில சமயங்களில் நாடகத்தையும், வேறு சில சமயங்களில் நாவலையும், இன்னும் சில சமயங்களில் சிறு கதையினையும், வேறு பல சந்தர்ப்பங்களில் கட்டுரை வடிவங்களையும் அவர் தேர்ந்து எடுத்துக் கொண்டார். அவரைப் பொறுத்த வரையில், தேவையை ஒட்டி இலக்கிய வடிவங்களை அவர் கையாண்டார். அதனால்தான் அண்ணாவின் படைப்புக்கள் நிரந்தரமான இலக்கிய அந்தஸ்தைப் பெறக் கூடியவை என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாத ஒரு நிலை உருவாகி இருக்கிறது.

ஜார்ஜ் பெர்னாட் ஷா ஆங்கிலத்தில் மிகச் சிறந்த நாடக ஆசிரியர்களில் ஒருவர் என்பது பற்றிக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனாலும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் போல, பெர்னாட் ஷாவின் நாடகங்கள் இலக்கியங்களாக நிலைபெறுமா என்பது குறித்து, நிறையக் கருத்து வேற்றுமைகள் உண்டு. பெர்னாட் ஷாவேகூட தன்னுடைய நாடகங்கள் இலக்கியங்களாக என்றைக்கும் வாழக் கூடும் என்று நம்பவில்லை. அதற்கான விளக்கத்தையும் அவரே சொல்லி இருக்கிறார். 'கருத்துகளுக்கு முதலிடம் கொடுத்து நான் நாடகங்களை அமைக்கிறேன்; என்னுடைய நாடகங்களுக்கு ஒரு நோக்கம் உண்டு. அந்த நோக்கம் நிறைவேறுகிறபோது என்னுடைய நாடகங்கள் அர்த்தமற்றதாகப் போய்விடக்கூடும். என்னுடைய நாடகங்கள் செலாவணியற்றுப் போனால்தான் என்னுடைய குறிக்கோள் வெற்றி பெற்று விட்டதாகக் கருதுவேன்' — தன்னுடைய நாடகங்களைப் பற்றி பெர்னாட் ஷா கூறியுள்ள தீர்ப்பு இது.

இந்தக் கணிப்பு, அண்ணாவின் எழுத்துக்களுக்கும் பொருந்தும் என்றே கருதுகிறேன். அண்ணாவின் நாடகங்களோ, நாவல்களோ சிறு கதைகளோ தமிழ் இலக்கிய வரிசையில் ஒரு நிலையான இடத்தைப் பெறுமா என்பது சந்தேகமே! நாடகத்தில் அவர் கையாண்ட உத்திகளும், நாவல்களில் அவர் கையாண்ட நடையும், சிறு கதை எழுதுவதில் அவர் தேர்ந்து எடுத்துக் கொண்ட பாணியும் நிச்சயமாக இலக்கியவாதிகளுக்கு என்றென்றும் எழுச்சி ஊட்டிக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. குறிக்கோள்கள் ஈடேறும் போது அண்ணாவின் எழுத்துகளும் தேவையற்றுப் போய்விடக் கூடும். இதை அண்ணாவின் எழுத்துக்கு உள்ள பலவீனமாக எவரும் கருத வேண்டியதில்லை. காரணம் அவர் எழுத்து எப்போது பயனற்றுப் போகும்? அவருடைய குறிக்கோள் நிறைவேறும்போது அவருடைய எழுத்தும் செல்வாக்கு இழந்து போகும்.

**இலக்கியம் படைக்க அண்ணா எழுதவில்லை. இலட்சியத்தை அடைய அண்ணா எழுதினார்.**

இலக்கியம் அவரது குறிக்கோளாக இருந்திருக்குமானால் அவர் தன்னுடைய பிரச்சாரத்தைப் பின்னுக்குத் தள்ளி, இலக்கிய வடிவத்தை முறையாக அமைப்பதில் கவனம் செலுத்தி, அதில் மகத்தான வெற்றி பெற்றிருக்க முடியும். அந்த ஆற்றல் அவருக்கு உண்டு என்பதை அவருடைய எழுத்துக்கள் இன்றைக்கும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால், 'அண்ணாவுக்கு உள்ள தனிச் சிறப்பு, சமூதாய சீர்திருத்தப் பிரச்சாரகராக அவர் எழுதிய போதும், ஓர் இலக்கியவாதியாக அவரால் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள முடிந்ததுதான்.

இலக்கிய உள்ளம் அவருடையது. எதையும் ரசிக்கின்ற சுபாவம் கொண்டவர் அவர். ஓர் இலக்கியவாதியின் பலவீனம் அனைத்தும் அவரிடம் இருந்தது. சமூக சீர்திருத்தக் களத்தில் நின்ற போதும், அரசியல்வாதியாகப் போராடிய போதும் இலக்கியம் என்னும் ஆயுதத்தை ஏந்தித் தான் அவரால் போராட முடிந்தது.

பு்டவையின் பெயர்கள் :

கோடி, கோடிகம், படாம், கோசிகம், கூறை, பஞ்சி, சாடி, நீவியம், சீரை, சம்படம், கலை, கலிங்கம், குடி, காடிகம், புட்டம், தூசு, காழகம், வட்டம், ஆடை, ஆவரணம், தானை, அறுவை, அம்பரம, ஆசாரம், மடி, பரிவட்டம். சேலை, வத்திரம், உடுக்கை, வாசம், இலக்காரம், துகில், இடையல், வேதகம், பட்டு, ஏடகம்.

ஆடையின் பெயர் :

நாகம், பாரி.

சட்டையின் பெயர் :

கஞ்சுளி, அங்கி, காஞ்சுகம், குப்பாயம், கஞ்சுகம், மெய்ப்பை, வாரணம்.

கச்சின் பெயர் :

வம்பு, வார், வசிகை, பட்டிகை, வட்டுடை.

ஆதாரம் :—சூடாமணி நிகண்டு.

இதற்கு ஒன்றைச் சொல்லலாம். தமிழகத்தின் பொருளாதார நிலைமையை விளக்கித் தன்னுடைய கண்ணோட்டத்தில் அண்ணா ஒரு நூல் எழுதினார். அந்த நூல் புள்ளி விவரங்களை ஏராளமாகக் கொண்டது. பொருளாதார ஆய்வுதான் அதன் அடிப்படை. தமிழகத்தின் பொருளாதாரம் என்னென்ன காரணங்களால் நலிவுற்றுக் கொண்டு இருக்கிறது என்கிற விஷயத்தை அந்த நூலில் அண்ணா தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். முற்றிலும் பொருளாதாரப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ள அந்த நூலுக்குத் தலைப்பு என்ன தெரியுமா? ''பணத் தோட்டம்''.

இப்படிப்பட்ட தலைப்பை அண்ணா ஒருவரால்தான் கொடுக்க முடியும். பணத் தோட்டம் என்று சொல்லுகின்ற போது அது வளமான தோட்டம் என்பது தெளிவாகிறது. நிலச்சுவான் முறை உள்ள ஒரு நாட்டில் ஒரு தோட்டம் பொது மக்கள் அனைவருக்கும் சொந்தமாக இருப்பது சாத்தியமில்லை. ஆக, தோட்டம் யாரோ ஒருவருக்குச் சொந்தமானது. 'அந்த ஒருவர்' அவரே பாடுபட்டுத் தோட்டத்தை உருவாக்கிஇருக்க முடியாது. நூற்றுக் கணககான தொழிலாளிகள் வியர்வை சிந்தி உருவாக்கிய தோட்டமாகத்தான் அது இருக்க முடியும். யாருடைய உழைப்பாலோ உருவான அந்தத் தோட்டத்திற்கு யாரோ ஒருவர் சொந்தக்காரராக ஆகிவிடுகிறார். நூற்றுக் கணக்கானவர்களின் உழைப்பினால் உருவான தோட்டம் ஒரு தனி மனிதரின் உடைமையாக இருந்து முழுப் பலனையும் அனுபவிக்கும் வாய்ப்பினை அவருக்குக் கொடுத்து விடுகிறது.

சாதாரணத் தோட்டத்தின் நிலையே இது என்றால் அண்ணா காட்டுகின்ற பணத் தோட்டத்தின் நிலை எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. நூல் முழுவதிலும் பலரின் உழைப்பு ஒரு சிலரின் மூலதனமாக எப்படி உருப்பெறுகிறது என்கிற விவரத்தை அண்ணா அடுக்கு மொழியில், எதுகை மோனை எழிலோடும், தனக்கே உரிய ஓசை நயத்தோடும் தமிழில் அருமையாக விளக்கிக் கொண்டே போகிறார்.

புத்தகத்தின் நூற்றுக்கணக்கான பக்கங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை, ஒரு தலைப்பின் மூலம் இலக்கிய உணர்வோடு சொல்லக் கூடிய ஆற்றல் அண்ணாவைத் தவிர வேறு யாருக்கு இருக்க முடியும்?

'பணத் தோட்டம்' என்கிற தலைப்பைப் படிக்கிறோம். தோட்டத்திற்குள் புக எல்லாருக்குமே ஆசைதான். ஆனால் தோட்டத்துக்குள் நுழைந்த பிறகுதான் திக்குத் தெரியாத தோட்டமாக அது இருக்கிற உண்மை புலப்படுகிறது. தோட்டம் பூராவும் கனிகள் கண்ணைப் பறிக்கின்ற வகையில் காட்சி அளிக்கின்றன. ஆனால் பறித்து உண்ண முடியாத பரிதாபம்! உரிமையுள்ள சொந்தக்காரர் யாரோ! உழைப்பும் அவருடையது அல்ல. திகைக்கிறோம். திணறுகிறோம்; ஏன் இந்த அநீதி என்று கேட்கிறோம். தோட்டம் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது.

புத்தகத்தை மூடிவைக்கிறோம். பணத்தோட்டம் என்கிற தலைப்பு மீண்டும் நினைவுக்கு வருகிறது.

தோட்டத்திற்குள் நுழையும் போது எத்தனையோ கனவுகள். தோட்டத்தை விட்டு வெளியே வரும்போது அந்தக் கனவுகள் கலைந்து விட்ட ஏமாற்றம். இலக்கிய நயம் நிரம்பிய ஒரு தலைப்பின் மூலம் படிப்போரின் உள்ளத்தில் உணர்ச்சி மோதல்களை ஏற்படுத்த அண்ணாவால்தான் முடியும். எதையும் இலக்கியமாகப் பார்க்கும் ரசனை உள்ளம் அவருடையது. ஆகவேதான் பேரிலக்கியங்கள் படைக்காமலேயே அவர் ஓர் இலக்கியவாதியாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார்.

—தொடரும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்ருக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்ருக அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு



# வண்ணத்துப் பூச்சி வரவேற்கிறது.

## 24-வது கூட்டுறவு கைத்தறி கண்காட்சி '78

34, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600 008. '78 ஏப்ரல் 1-முதல் 17-வரையில்.

அகில இந்தியாவெங்கும் நேர்த்தியான நெசவுக்குப் புகழ்பெற்ற இடங்களிலிருந்து தருவிக்கப்பட்ட புடவைகள், வேட்டிகள், ஆடை ரகங்கள், படுக்கை விரிப்புகள், வீட்டு அலங்காரத் துணிவகைகள் மற்றும் ஏற்றுமதி ரக கைத்தறி வகைகள்.

வண்ணத்துப் பூச்சி வழங்கும் சிறப்புத் தள்ளுபடி 10% முதல் 40% வரை கண்காட்சி அரங்கத்திலும் மற்றும் நாடெங்கிலுமுள்ள எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

**சிறப்புத் தள்ளுபடி**
**10% முதல் 40% வரை**

**கோ-ஆப்டெக்ஸ்**